

தென்னாட்டுப் பேரரசர்







புலவர்-குப்புசாமி

வேங்கடராமா அண்டு கம்பெனி
சென்னை.

தோழர் - ஜெயராமனுக்கு
நினைவன்புடன்

அன்பளிப்பு
கா. சிவம்
திருச்செங்கோடு
கொண்டயம்பாளையம்

21.5.51

K.R. Manickam

தென்னாட்டுப் பேரரசர்

ஆசிரியர் :

புலவர் - W. V. குப்புசாமி

தமிழாசிரியர், சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளி,
சென்னை.

வெளியிட்டோர் :

வேங்கடராமா அண்ட் கம்பெனி
எஸ்பிளனேட் :: சென்னை

பதிப்புரிமை] 1947 [விலை அணா 10

First Edition — Nov. 1946
Latest Reprint — July 1947

Approved by the Text-Book Committee, Madras for class use.

Vide Parts I & II Pages 7 & 19,
of Ft. St. George Gazette, Dated 20—5—1947.

Printed at The Liberty Press, Madras. Q. H. Ms. 499
for Venkatrama & Co., Madras.—Q.H. M.S. 62-A. 4000 Copies

முகவுரை

தென்னாட்டுப் பேரரசர் என்னும் பெயர்கொண்ட இச்சிறு நூல், (1) சேரன் - செங்குட்டுவன், (2) பல்லவன் - நரசிம்மவர்மன், (3) சோழன் - இராஜராஜன் என்னும் பேரரசர் வரலாறுகளை எளிய நடையிற்சுருங்கிய முறையிற் கூறுவது. செங்குட்டுவன், இராஜராஜன் வரலாறுகளிலிருந்து—தமிழர் வீரம், தமிழ்ப்பற்று, நாட்டுப் பற்று, சமயப்பற்று, கலை வளர்ச்சி முதலிய நற்பண்புகளை அறியலாம். பல்லவன் வரலாற்றிலிருந்து அக்கால மக்கள் வீரம், சமயப்பற்று, பலகலை வளர்ச்சி முதலியவற்றை உணரலாம்.

சங்க கால அரசனை செங்குட்டுவன் (கி. பி. 150—200), இடைக்கால அரசனை நரசிம்மவர்மன் (கி. பி. 630—668), பிற்கால அரசனை இராஜராஜன் (கி. பி. 985—1014) ஆகிய இம்மூவர் வரலாறுகளைப் படிப்பவர் கி. பி. 2-ஆம் நூற்றாண்டிலிருந்து கி. பி. 11-ஆம் நூற்றாண்டு வரைப்பட்ட தமிழகத்தின் நடைமுறைகளையும் நாகரிகத்தையும் ஒருவாறு அறிதல் கூடும்.

இந்நூல் இளமாணவரை உளங்கொண்டு இனிய-எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது. தமிழினிடத்தும் தமிழ் நாட்டினிடத்தும் பற்றுள்ள பெருமக்கள் இந் நூலினை ஆதரிப்பர் என்பது எனது நம்பிக்கை.

ஆசிரியன்

உள்ளுறை

சேரன் - செங்குட்டுவன்



சங்ககாலத் தமிழகம்
[கி.மு. - கி.பி. 400]
கோதாவரி
கிருஷ்ணை
வடபெண்ணை
வேங்கடம்
தொண்டைநாடு
காஞ்சிபுரம்
பாலாறு
கடல்மல்லை
தென்பெண்ணை
காவிரி
தகடூர்
மரக்காணம்
புதுச்சேரி
கொங்கு நாடு
தொண்டி
காவிரிப்பூம்பட்டினம்
ஆமூர்
முதிரமலை
உறையூர்
நாகப்பட்டினம்
வஞ்சி
முசிறி
பழநி
பிரான்மலை(பறம்புமலை)
மதுரை
கோடைமலை
வைகை
பாண்டி நாடு
நல்லிநாடு
நாஞ்சில்மலை
கொற்கை
கன்னிமுனை
இலங்கை
அரபிக் கடல்
வங்காள விரிகுடா

தென்னாட்டுப் பேரரசர்

1. சேரன்—செங்குட்டுவன்

1. தமிழகம்

தமிழகம்

நாம் பேசுவது தமிழ்மொழி அல்லவா? அதனால் நமது நாடு தமிழகம் எனப் பெயர் பெற்றது. தமிழகம் வடக்கே வேங்கடம் (திருப்பதிமலை) வரை பரவி இருந்தது; தெற்கே கன்னியாகுமரி வரை பரவி இருந்தது. கிழக்கில் வங்காளக் குடாக்கடல் வரையும் மேற்கில் அரபிக்கடல் வரையும் பரவி இருந்தது.

தமிழகப் பிரிவுகள்

இங்ஙனம் பரவி இருந்த தமிழகம் ஏறக்குறைய ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்கு முன் மூன்று பெரும் பிரிவுகளாக இருந்தது. அவை சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு என்பன. இந்நாடுகளைப் பல நூற்றாண்டுகளாக முறையே சேரர், சோழர், பாண்டியர் என்ற அரச பரம்பரையினர் ஆண்டுவந்தனர்.

சேர நாடு

சேரநாடு என்பது அரபிக்கடலைச் சார்ந்துள்ள மேற்குக் கடற்கரை நாடு. இஃது இன்றைய திரு

வாங்கூர், கொச்சி சம்ஸ்தானங்களும் மலையாள ஜில்லாவும் சேர்ந்த பகுதி. இந்நாடு இன்று மலையாள நாடு எனப் பெயர் பெற்றுள்ளது. சேரநாட்டின் தலைநகரம் வஞ்சி மாநகரம் என்பது. அது பெரியாறு கடலோடு கலக்கும் இடத்தில் அமைந்திருந்த அழகிய நகரம். முசிறி என்பது சேரநாட்டுத் துறைமுகங்களுள் சிறந்தது. தொண்டி என்பது மற்றொரு துறைமுகப் பட்டினமாகும்.

சேரநாடு ஏறக்குறையக் கி. மு. 1000 முதலே மேற்கு நாடுகளுடன் கடல் வாணிகம் செய்து வந்தது; அகில், சந்தனம், மிளகு, வாசனைப்பொருள்கள், மயில், யானைத்தந்தம் முதலியவற்றை ஏராளமாக மேற்கு நாடுகட்கு ஏற்றுமதி செய்துவந்தது.

சேரர் மலைநாட்டினர் ஆதலின் சிறந்த வில்லாளிகளாக இருந்தனர்; அதனால் 'வில்லவர்' எனப் பெயர் பெற்றனர்; மலைநாட்டினர் ஆதலால் 'வானவர்' எனப்பட்டனர். சேர அரசர் கல்வியிலும் வீரத்திலும் சிறந்திருந்தனர்; தங்கள் தாய்மொழியான தமிழை வளம்பெற வளர்த்தனர்; தமிழ்ப் புலவர்களை ஆதரித்தனர்.

சோழ நாடு

சோழநாடு என்பது தஞ்சாவூர் திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களைக் கொண்ட நிலப்பகுதி. இது சமவெளிப் பிரதேசம் ஆகும். காவிரியாறும் அதன் துணையாறுகளும் கிளையாறுகளும் பாய்ந்து இந்நாட்டை வளமிக்க நாடாகச் செய்துவருகிறது. அதனால் இந்நாடு 'வளநாடு' என்று பெயர் பெற்றது. இதனை ஆண்ட சோழர் 'வளவர்' என்று

பெயர் பெற்றனர். இந்நாட்டின் தலைநகரங்கள் **உறையூர், காவிரிப்பூம் பட்டினம்** என்பன. துறைமுக நகரம் காவிரிப்பூம் பட்டினம் என்பது.

சோழநாடு வயல் வளத்தில் சிறந்தது; எங்கும் பசுமை நிறைந்த வயல்களையும் தோட்டங்களையும் சோலைகளையும் மிக்குடையது; சோற்றுப் பஞ்சம் இல்லாத நாடு; அதனால் 'சோழ வளநாடு சோறுடைத்து' என்று பாராட்டப்பட்டது. இதனை ஆண்ட சோழர் தமிழைத் தம் உயிராகக் கருதி வளர்த்தனர்; தமிழ்ப்புலவர்கட்கு ஊர்களையும் நிலங்களையும் அளித்தனர். சோழநாட்டுக் கைத்தொழில் பொருள்களும் அரிசி முதலிய உணவுப் பொருள்களும் வெளிநாடுகட்கு ஏற்றுமதி ஆயின.

சோழர் தம் நாட்டுக்கு வடக்கே திருவேங்கடம் வரை இருந்த நாட்டையும் வென்று ஆண்டனர். அந்நாடு தொண்டைநாடு எனப்படும். அதன் தலைநகரம் **காஞ்சி** என்பது.

பாண்டியநாடு

இது மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களைக் கொண்ட நிலப்பகுதி. இதன் தலைநகரம் **மதுரை**; துறைமுகப்பட்டினம் **கொற்கை** என்பது. அது தாமிரபரணியாறு கடலோடு கலக்கும் இடத்தில் அமைந்திருந்தது. வைகை என்னும் ஆறு வடபாண்டி நாட்டை வளப்படுத்துகிறது. கொற்கைத் துறைமுகம் முத்து எடுப்பதற்கும் பெயர்பெற்ற இடமாகும். அந்த முத்துக்கள் சீனம் முதலிய கிழக்கு நாடுகட்கும் இட்டாலி முதலிய

மேற்கு நாடுகட்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன. பாண்டிய நாடு கடல் வாணிகத்தில் சிறந்திருந்தது.

பாண்டியர் தமிழை வளர்த்த பெரும் புகழ் உடையவர். அவர்கள் தமிழ்ப் புலவர்களை ஒன்று கூட்டினர்; மதுரையில் கூட்டித் தமிழ் வளர்த்தனர். அவர்கள் கூட்டத்திற்குப் 'புலவர் சங்கம்' என்பது பெயர். அதுவே மதுரைத் தமிழ்ச் சங்கம் என்பது. அச்சங்கம் இருந்த காலத்தில் செய்யப்பட்ட நூல்களே சங்க நூல்கள் எனப்படுவன.

---

2. செங்குட்டுவன் இளமைப் பருவம்

நெடுஞ்சேரலாதன்

மேற்குமலைத் தொடர்க்கும் அரபிக்கடலுக்கும் இடைப்பட்ட சேரநாட்டை ஆண்ட அரசர்கள் பெரும்புகழ் படைத்து விளங்கினவன் நெடுஞ்சேரலாதன் என்பவன். இவன் நல்ல உடற்கட்டு வாய்ந்தவன்; அஞ்சாத நெஞ்சம் படைத்தவன்; பகைவர்க்கு யமனைப் போன்றவன்; கல்வி கேள்விகளில் சிறந்தவன்; சிறந்த தமிழப் புலவர்களை ஆதரித்துத் தமிழை வளர்த்தவன். இவன் சேர நாட்டை வடக்கிலும் கிழக்கிலும் விரிவாக்கிப் பேரரசனாக ஆண்டவன்; இமயம்வரை சென்று 'இமய வரம்பன்' என்று பெயர் பெற்றவன்.

இப்பேரரசனுக்கு மனைவியர் இருவர். அவருள் பட்டத்தரசி 'நற்சோணை' என்பவள். அவளுக்குச்

செங்குட்டுவன், இளங்கோ என்ற மக்கள் இருவர் பிறந்தனர். இரண்டாம் மனைவி ஒரு சிற்றரசன் மகள். அவளுக்குக் களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்ற மக்கள் இருவர் பிறந்தனர்.

செங்குட்டுவன் இளமையும் கல்வியும்

நெடுஞ்சேரலாதன் சிறந்த போர்வீரன். ஆதலால் அவன் தன் மக்கட்கு யானையேற்றம், குதிரையேற்றம், மற்போர் முதலிய போர்ப் பயிற்சிகளைக் குறைவு இல்லாமல் கற்பிக்க ஏற்பாடு செய்தான். பண்பட்ட படைத்தலைவர் அரசகுமாரர்கட்கு மேற்சொல்லப்பட்ட போர்ப் பயிற்சிகளை அளித்தனர். கடலில் கப்பலைச் செலுத்துதல், செலுத்திக் கடற் கொள்ளைக்காரரை அழித்தல், பகைவர் துறைமுகங்களைக் கைப்பற்றுதல் முதலியவற்றிலும் பயிற்சி அளிக்கப்பட்டது. அரசிளங் குமரர்க்குத் தமிழ்நாட்டு நில அமைப்பு - சோழ, பாண்டிய நாடுகளின் அமைப்பு, சிற்றரசர் ஆண்ட பகுதிகள், ஒவ்வொரு நாட்டையும் ஆண்டுவந்த அரச மரபுகளைப் பற்றிய செய்திகள், சேரநாட்டுக்கு அப்பால் இருந்த நாட்டு நிலைமை, மற்ற அரசர்களுடைய படைவன்மை முதலியனவும் தெளிவாக அறிவிக்கப்பட்டன. இவற்றுடன் நாட்டை ஆள வேண்டும் முறை, குடிகளைக் காக்கும் முறை, நாட்டு வருவாயைப் பெருக்கத் தக்க வழிகள், நாட்டைப் பகைவர் தாக்குதலிலிருந்து பாதுகாக்கும் முறை முதலிய அரசியல் சம்பந்தமான செய்திகளும் தக்க ஆசிரியர்களால் கற்பிக்கப்பட்டன.

தமிழ்க் கல்வி

மேற்சொல்லப்பட்ட பல சிறப்பட்ட பயிற்சிகளுடன் அரசிளங்குமரர் தாய்மொழியாகிய தமிழைக் கற்கத் தொடங்கினர். நெடுஞ்சேரலாதன் சிறந்த தமிழ் அறிஞன் ஆதலால் அவன் சபையில் பெரிய தமிழ்ப்புலவர் பலர் இருந்தனர். அவருள் ஒருவரைத் தம் மைந்தர்க்குத் தமிழ்க்கல்வி புகட்ட ஏற்பாடு செய்தான். மைந்தர் கற்ற கல்வி யாது?

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் இருந்த இலக்கண நூல்களையும் செய்யுள் நூல்களையும் அரசகுமாரர் கற்றனர். அரசகுமாரர் தாம் பேரரசன் மைந்தர் என்பதை மறந்து, அடக்கத்துடனும் ஆசிரிய பக்தியுடனும் நன் மாணாக்கராக இருந்து கல்வி கற்றனர். இக்காலப் பணக்கார மாணவருட் சிலர் அகந்தையின் அவதாரமாக இருந்து அன்றாடம் நடைபெறும் பாடங்களைப் படிக்காமல் வறிதே காலம் கழிக்கின்றனர்—ஆசிரியருக்கு அடங்காமல் திரிகின்றனர் அல்லவா? அவர்களைப் போல நெடுஞ்சேரலாதன் மக்கள் இருந்திலர். அவர்கள் ஆசிரியரைக் கண்கண்ட தெய்வமாகப் போற்றினர்; அவர் சொற்படி நடந்தனர்; அவர் நாளும் போதித்தவற்றைக் கருத்துடன் கவனித்து மறுநாள் அவற்றை ஒப்புவித்து மேன்மேலும் ஊக்கத்துடன் படித்தனர்.

அரசிளங்குமரர் இவ்வாறு நல்லாசிரியரிடம் அன்புடனும் அடக்கத்துடனும் இருந்து கற்க வேண்டிய நீதி நூல்களையும் வரலாற்று நூல்களையும் இலக்கண நூல்களையும் குறைவறக் கற்றனர். இவ

ருள் இளங்கோ கவிபாடும் ஆற்றலும் பெற்றார். செங்குட்டுவன் மூத்தவன் ஆதலால் அரசனுக்குத் தேவையான நூல்களைக் கருத்தூன்றிப் படித்துத் தேறினன்.

கல்விக்குப் பின்

இங்ஙனம் ஐந்து வயதுமுதல் ஏறத்தாழப் பதினெட்டு வயதுவரை செங்குட்டுவன் நல்ல ஆசிரியரிடம் கல்வி கற்றான்; படைத்தலைவர்களிடம் போர்ப் பயிற்சிகளைப் பெற்றான்; இவ்விரண்டின் பயனாகச் சிறந்த உடற்கட்டும் நிறைந்த பலதுறை அறிவும் வாய்க்கப்பெற்றான்; தன் தந்தை ஆண்ட பெரு நாட்டைத் தந்தையுடனும் அமைச்சருடனும் சுற்றிப்பார்த்து நாட்டைப்பற்றிய விவரங்களை நன்கு அறிந்தான்; நாட்டு விளைபொருள்கள், ஏற்றுமதிப் பொருள்கள், இறக்குமதிப் பொருள்கள், நாட்டு வருவாய்—செலவு முதலிய அரசியல் தொடர்பான எல்லாவற்றையும் கவனித்து அறிந்தான்; நாட்டுத் துறைமுகங்களில் வந்து தங்கும் கப்பல்களைப் பார்வையிட்டான்; அவற்றை அனுப்பிய அயல் நாட்டு அரசாங்கங்களுடன் எவ்வாறு தொடர்பு கொள்ளவேண்டும் என்பதை அறிந்தான். இங்ஙனம் சேரன் - செங்குட்டுவன் தந்தைக்குப்பின் பட்டம் பெறத் தன்னைப் பல துறைகளிலும் பக்குவம் செய்து கொண்டான். இளங்கோ, நூல்களைப் படிப்பதிலும் மதசம்பந்தமான விஷயங்களைக் கவனிப்பதிலும் காலம் கழித்து வந்தார்.

---

3. இளங்கோ 'அடிகள்' ஆதல்

அரச சபை

நெடுஞ்சேரலாதன் கல்வி - கேள்விகளில் மிக்க தன் மைந்தர் இருவரையும் அரசியல் அநுபவம் பெறுவதற்காக நாள்தோறும் அரச சபைக்கு அழைத்துச்செல்வது வழக்கம். அங்குச் செங்குட்டுவன் அரசனுக்கு வலப்புறமுள்ள ஆசனத்திலும் இளங்கோ இடப்புறமுள்ள ஆசனத்திலும் அமர்ந்திருப்பது வழக்கம். அரச சபையில் அமைச்சர் ஒருபுறமாக இருப்பர்; அவர்கட்குப் பின்னால் அவரவர் அரசாங்கப் பிரிவைச் சேர்ந்த உயர்தர உத்தியோகஸ்தர் இருப்பர். ஒரு பக்கம் சேனைத் தலைவர் இருப்பர். மற்றொரு பக்கம் நீதிபதிகள் இருப்பர். நகரப் பெருமக்கள் ஒரு பக்கம் இருப்பர். அரசன் அரசாங்கப் பிரிவுகள் பலவற்றைப்பற்றி அமைச்சரை விசாரிப்பான்; உடனே அமைச்சன் தனக்கு அடங்கிய உயர்தர உத்தியோகஸ்தனைப் பார்ப்பான்; அவன் அரசனுக்குத் தேவையான எல்லா விவரங்களையும் எடுத்துச் சொல்லுவான். இத்தகைய நாட்டு நடப்பு நாள்தோறும் நடைபெறும். இந்த நடவடிக்கைகளை நேரில் இருந்து கவனிப்பதே சிறந்த பயிற்சியாகும். செங்குட்டுவன் இந்தச்சபை நடவடிக்கைகளைக் கூர்மையாகக் கவனித்துவந்தான்; அமைச்சர் வேலைகள், அவர்கட்கு அடங்கிய இலாகாக்கள், அந்த இலாகாக்களின் தலைவர்களாகிய உயர்தர உத்தியோகஸ்தர்கள் செய்யும் வேலைகள் முதலிய விவரங்களைத் தெளிவாக அறியலாயினன்.

சோதிடன் கூற்று

ஒருநாள் அரச சபைக்கு அயல்நாட்டுச் சோதிடன் ஒருவன் வந்தான். அவன் அரசனைப் பணிந்து சபையில் அமர்ந்தான். அப்பொழுது அரச காரியங்கள் நடைபெற்று வந்தன. சோதிடன் அரச குமாரர் இருவரையும் மாறி மாறிப் பார்த்தான்; நெடுநேரம் யோசித்தான்; பின்னர் எழுந்து நின்று அரசனைப் பணிந்து, "பெருமானே, உமக்கு இடப்புறமாக இருக்கும் அரசிளங்குமரர் உத்தம அரச இலக்கணங்கள் அமையப் பெற்றவராக இருக்கிறார். அவர் உமக்கு இரண்டாம் பிள்ளை அல்லவா! அவரே உமக்குப் பின் அரசர் ஆவதற்குத் தகுதியுடையவர் என்று சோதிட இலக்கணம் கூறுகிறது" என்று கூறி அமர்ந்தான்.

கலக்கம்

நெடுஞ்சேரலாதன் அது கேட்டுத் திடுக்கிட்டான். அவன் தன் மக்கள் இருவரையும் மாறி மாறிப் பார்த்தான். செங்குட்டுவன் முகம் சூரியனைக் கண்ட அல்லி மலர்போல வாடியது. இளங்கோ அடக்க முடியாத கடுங்கோபம் கொண்டார். அவர் உதடுகள் துடித்தன; கண்கள் சிவந்தன. சபையோர் ஒன்றும் தோன்றாமல் அரசனையும் அரசிளங்குமாரரையும் மாறி மாறிப் பார்த்தனர்.

இளங்கோ - சபதம்

இளங்கோ பதட்டத்துடன் எழுந்து, சோதிடனைப் பார்த்து, "ஏ அறிவற்ற சோதிடனே, மூத்த

வன் இருக்க இளையவன் பட்டம் பெறுதல் என்பது முறையாகுமா? செங்கோல் அரசர் நாடுகளில் இந் நிகழ்ச்சி நடந்ததுண்டா? தமிழ் அரசர் மானவீரர்; நீதிமுறைக்கு மாறாக எதனையும் செய்யத் துணியாதவர். நீ கூறிய தடுமாற்ற நிகழ்ச்சி இதுவரை இத் தென்னாட்டில் நடைபெற்றதில்லை. மேலும், என் தமையனாரிடம் இல்லாத எந்த உத்தம அரச இலக்கணங்கள் என்னிடம் சிறந்து காண்கின்றன? என்ன பித்தன் நீ! என் தமையனார் இளமை முதலே அரசர்க்குரிய பலவகைப் பயிற்சிகளில் பண்பட்டு வருகிறார். நான் அப்பயிற்சிகளில் ஊக்கம் செலுத்தாதவன். இந்த ஒரு காரணம் கொண்டே நான் அரசன் ஆதற்குத் தகுதி அற்றவன் என்று உறுதியாகக் கூறலாமே! நான் காவியச் சுவையிலும் சமய ஆராய்ச்சியிலும் பொழுது போக்குபவன். நான் இனியும் அவ்வாறே இருக்க விரும்புகிறேன். இஃது என் மன நிலைமை..........

"ஒருவேளை நீ நினைக்குமாறு நாளை அறிவற்ற பொதுமக்கள் சிலரால் இது சம்பந்தமான கிளர்ச்சி ஏதேனும் நடைபெறினும் பெறலாம். அதற்கு இடங்கொடுத்தல் தவறு. ஆதலின் நான் இன்று முதல் துறவு மேற்கொண்டேன் என்பதை இப்பேரவையில் உறுதி கூறுகின்றேன்.. நான் இந்த நிமிஷம் முதல் துறவி. இந்தத் துறவு நிலையில் நான் எப்பொழுதுமே எவர் விரும்பினாலும் பட்டத்தை அடைய முடியாது. ஆனால் நான் என்றும் என் அண்ணனுக்கு உதவியாக இருந்து வருவேன். அவரே சேர அரசர் ஆதற்கு உரியவர். இது சத்தியமே!" என்று ஆவேசமாகப் பேசினார்.

இளங்கோ 'அடிகள்' ஆதல்

இளங்கோவின் ஆவேசப் பேச்சைக் கேட்ட அரசன், "ஆ! மகனே! அவசரப்பட்டுச் சபதம் செய்யலாமா!" என்று கண்ணீர் விட்டு மகனைத் தழுவிக்கொண்டான். செங்குட்டுவன் பதைத்து, "தம்பி, இந்தப் பயனற்ற சோதிடன் பேச்சைக் கேட்டு நீ துறவுகொள்ள வேண்டுமா? ஏன் அவசரப்பட்டனை?" என்று அன்புரை கூறினன். இளங்கோ அவர்களைப் பணிந்து, "நீங்கள் என்னை மன்னிக்கவேண்டும். நான் துறவு கொள்ளினும் உங்களை விட்டுப் பிரியேன்; கவலைப்படவேண்டா. நான் என் பொழுதைத் தமிழ்த் துறையிலும் சமயத் துறையிலும் கழிக்க விரும்புகின்றேன். அந்த விருப்பத்திற்குத் துறவு வேடமே ஏற்றது. நீங்கள் துறவு பூண்ட என்னை ஆசீர்வதிக்க வேண்டும்" என்று கூறித் தகப்பனையும் தமையனையும் பணிந்தார். அவர்கள் அன்பின் பெருக்கினல் கண்ணீர் விட்டு அவரை ஆசீர்வதித்தனர். இளங்கோ அன்றுமுதல் இளங்கோ அடிகள் என்று அழைக்கப்பட்டார்.

குணவாயில் கோட்டம்

வஞ்சிமாநகரம் பெரிய கோட்டைக்குள் அமைந்திருந்தது. அதன் கிழக்கு வாசலிற்கு வெளியே அழகிய—கண்ணைக் கவரும் பூஞ்சோலை இருந்தது. அதன் நடுவில் சமண சமயத் துறவிகள் இருந்து சமய போதனை செய்து வந்தனர். அங்கு ஒரு கோட்டம் (கோவில்) இருந்தது; அதனைச் சேர்ந்து மடம் ஒன்று இருந்தது. இளங்கோ அடிகள்

அந்த மடத்தில் இருந்து சமணசமயத் துறவியாகக் காலம் கழித்து வந்தார். அவர் எப்பொழுதும் துறவிகளுடன் சமய ஆராய்ச்சியும் தமிழ் ஆராய்ச்சியும் செய்து வந்தார்; ஆயினும் அடிக்கடி அரண்மனைக்குச் சென்று பெற்றோரையும் தமையனையும் பார்த்துவந்தார். செங்குட்டுவன் தந்தையுடன் இருந்து அரசகாரியங்களைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வந்தான்.

---

4. செங்குட்டுவன் - சேர அரசன்

செங்குடடுவேன் அரசன் ஆதல்

செங்குட்டுவனுக்கு இருபது வயது நடக்கையில் நெடுஞ்சேரலாதன் காலமானான். உடனே செங்குட்டுவன் தாயான நற்சோணை என்பவள் உடன் கட்டை ஏறினாள். செங்குட்டுவன் அவர்கட்குச் செய்யவேண்டிய ஈமக் கடன்களைச் செய்தபின் சேர அரசனாக முடிசூடிக்கொண்டான்.

தாய்க்குக் சோவில்

கணவன் இறந்தவுடன் தீப்பாய்ந்து மாண்ட பத்தினியாகிய தன் தாயின் நினைவுக்கு அடையாளமாகக் கல் நட்டுக் கோவில் எடுப்பிக்கச் செங்குட்டுவன் விரும்பினான். 'தாயின் உருவம் பொறித்தற்கு உரிய கல்லைப் பொதிய மலையிலிருந்து கொண்டுவருதல் சிறந்ததா? இமயமலையில் இருந்து கொண்டு வருதல் சிறந்ததா?' என்ற கேள்வி எழுந்தது. இமயமலையிலிருந்து கொண்டுவரும் கல்லே

சேரன் பெருமைக்கு ஏற்றது' என்பது முடிவு செய்யப்பட்டது.

வடநாட்டு யாத்திரை

செங்குட்டுன், பெரும் படையுடன் வடநாடு நோக்கிச் சென்றான். அவனது யாத்திரை நோக்கத்தை அறியாத வடநாட்டு அரசர் பலரும் அவன் படையெடுத்து வருவதாக எண்ணினர். அதனால் அவர்கள் அவனைப் பல இடங்களில் தாக்கினர். அஞ்சா நெஞ்சம் படைத்த சேரன்-செங்குட்டுவன் புலிக்கூட்டத்துள் சிங்கம் பாய்வதைப்போல் பகைவர் கூட்டத்துள் பாய்ந்தான். அவன் வீரத்தைக் கண்ட சேரநாட்டுப் படைவீரர் வீராவேசம்கொண்டு பாய்ந்து போரிட்டனர். ஒவ்வோர் இடத்திலும் செங்குட்டுவன் வெற்றிமாலை சூடினான்; வெற்றி முழக்கத்துடன் கங்கைக் கரையை அடைந்தான்; பல படகுகளின் உதவியால் அக்கரையை அடைந்தான்; அடைந்து, மேலும் வடக்கு நோக்கிச் சென்றான். அப்பொழுது அங்கு இருந்த அரசர் பலர் ஒன்றுகூடி அவனைத் தாக்கினர். செங்குட்டுவன் அவர்களைச் சூறைக் காற்றில் அகப்பட்ட பஞ்சு போலப் பறக்கடித்தான்; பின்னர்ச் சிற்ப வல்லுநரைக் கொண்டு தக்க கல்லை எடுத்து வரச் செய்தான்; அதனைக் கங்கையாற்றில் முறைப்படி நீராட்டித் தூய்மை செய்வித்தான். அதன் பிறகு வெற்றி முழக்கத்துடன் தாய்நாடு மீண்டான்.

கோவில் எடுத்து விழாச் செய்தல்

வஞ்சி நகரை அடைந்த செங்குட்டுவன் ஏவற்படி சிற்ப வல்லுநர் நற்சோணையின் உருவத்தைக்

கல்லில் செதுக்கினர்; அவ்வுருவத்தின்கீழ் அந்த அம்மையின் அருமை பெருமைகளை எழுதினர். பிறகு அக்கல் நடப்பட்டது. நடப்பட்ட இடத்தில் அழகிய கோவில் கட்டப்பட்டது. குறித்த நாளில் விழாக் கொண்டாடப்பட்டது. செங்குட்டுவன் மனம் மகிழ்ச்சி அடைந்தது.

---

5. செங்குட்டுவன் போர்ச்செயல்கள்

கொங்குநாட்டுப் போர்

கொங்குநாடு என்பது சேலம், கோயம்புத்தூர், நீலகிரி ஜில்லாக்கள் சேர்ந்த நாடு. இது கொங்கு (பொன்)க்குப் பெயர்போனது அதனால் கொங்கு நாடு எனப் பெயர் பெற்றது. இந்நாட்டில் சிற்றரசர் பலர் இருந்து ஆண்டனர். கொங்கு நாட்டைச் சோழ, பாண்டியர் தமக்கு உட்பட்டதாக வைத்துக்கொள்ள முயன்றனர். அவர்கள் அதில் வெற்றி பெற்றால் சேரநாட்டுக்கு ஆபத்து உண்டாகும். அதனால் செங்குட்டுவன் கொங்குநாட்டின்மீது படையெடுத்தான். அப்பொழுது அவனைக் கொங்கு நாட்டுச் சிற்றரசரும் சோழ பாண்டியரும் சேர்ந்து தாக்கினர். ஆனால், செங்குட்டுவன் அவர்கட்கு அஞ்சவில்லை. அவன் முழு வன்மையும் காட்டிப் போரிட்டான்; யானைக் கூட்டத்துள் புலி பாய்வதைப்போலப் பகைவர் கூட்டத்துள் பாய்ந்தான்; தன் வில் ஆண்மையும் வாள் ஆண்மையும் திறம்படக் காட்டினான். போர் 'கொங்கர் செங்களம்' என்ற இடத்தில் நடந்தது. அதிகம் அறைவதேன்?

போர்க்களத்தில் பகைவர் கதிரவனைக் கண்ட பனி போலப் பறந்தனர். அவர்கள் படை சிதறுண்டது. செங்குட்டுவன் வெற்றி பெற்றான்.

கடற்போர்

சேரநாட்டுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு மேற்கே சென்ற கப்பல்களையும் மேற்கு நாடுகளிலிருந்து சரக்குகளை ஏற்றிக்கொண்டு முசிறி, தொண்டி என்ற துறைமுகங்களை நோக்கி வந்த கப்பல்களையும் வழிமறித்துக் கொள்ளையடித்து வந்த கூட்டத்தார் 'கடற் கடம்பர்' எனப்பட்டனர். அவர்கள் மேற்குக்கரையை அடுத்த சிறு தீவுகளில் தங்கி இக்காரியத்தைச் செய்துவந்தனர். இதனால் சேரநாட்டுக் கடல் வாணிகம் துன்பப்பட நேர்ந்தது. இதனை உணர்ந்த செங்குட்டுவன் தன் கடற்படையைத் தயாரித்து அப்பகைவரைத் தாக்கச் சென்றான். அவர்கள் செங்குட்டுவன் வரவை அறியாது களிப்புடன் இருந்தனர். செங்குட்டுவன் திடீரெனச் சென்று அவர்களை வளைத்துக்கொண்டான்; அவர்கள் இருந்த தீவுகளை நாசமாக்கினான்; அவர்கள் பயன்படுத்திய படகுகளை அழித்தான்; இங்ஙனம் அவர்கள் பலத்தைத் குறைத்து மீண்டான். அதன் பயனாக அவனது ஆட்சியில் கடற்கொள்ளைக்காரர் துன்பம் இல்லாதிருந்தது. ஆதலால் அயல்நாட்டு வாணிகரும் தமிழ்நாட்டு வாணிகரும் செங்குட்டுவனை வாயார வாழ்த்தினர். தமிழ்நாட்டுக் கடல் வாணிகம் நன்றாக வளர்ச்சியுற்றது.

பழையனுடன் போர்

பழையன் என்பவன் பாண்டியன் படைத் தலைவன். அவன் அறுகை என்னும் சிற்றரசனுடன் ஓயாது போரிட்டு வந்தான். அறுகை என்பவன் செங்குட்டுவனுக்கு நண்பன். மேலும் செங்குட்டுவனுக்குப் பாண்டியன் பகைவன் அல்லவா? ஆதலால் செங்குட்டுவன் தன் நண்பனுக்கு உதவியாகச் சென்று பழையனைப் போரில் தோற்கடித்தான்; அவனது காவல் மரமான வேப்ப மரத்தை வெட்டி வீழ்த்தினான். அப்பகைவனுடைய யானைகளையே கடாக்களாகவும், அவன் மனைவியர் கூந்தலைக் கயிறாகவும் கொண்டு வண்டியில் இட்டு இழுப்பித்தான். இங்ஙனம் செய்வது பகைவனைக் கடுமையாக அவமானப்படுத்தும் செயலாக அக் காலத்தில் கருதப்பட்டது.

சோழருடன் போர்

செங்குட்டுவன் தாயான நற்சோணை சோழன் மகள். அவளது சகோதரன் சோழ அரசனாக இருந்து இறந்தான். அப்பொழுது அவன் மகனும் செங்குட்டுவன் மைத்துனனுமான நெடுமுடிக்கிள்ளி என்பவன் சோழ மன்னனாக அரியணை ஏறவேண்டும் அல்லவா? ஆனால் அதனை எதிர்த்துச் சோழ அரச மரபினர் ஒன்பதின்மர் உள்நாட்டில் கலகம் செய்தனர். இளைஞனான நெடுமுடிக்கிள்ளி செய்வகை தோன்றாது விழித்தான்; முடிவில் தன் அத்தை மகனான செங்குட்டுவன் உதவியை வேண்டினான்.

செங்குட்டுவன் பெரும் படையுடன் சோழ நாட்டிற்குள் நுழைந்தான். அரச விசுவாசம் உடைய சோழர் படை செங்குட்டுவன் பக்கம் சேர்ந்துகொண்டது. செங்குட்டுவன் கலகம் விளைத்த ஒன்பதின்மரை 'நேரிவாயில்' என்ற இடத்தில் சந்தித்தான். அவ்விடம் உறையூருக்குத் தெற்கேயுள்ள இடமாகும். அது நேரி என்னும் மலைக்குச் செல்லும் பாதையில் உள்ளது; அதனல் நேரிவாயில் எனப் பெயர் பெற்றது. அந்த இடத்தில் செங்குட்டுவனுக்கும் சோழ மரபினருக்கும் போர் நடந்தது. செங்குட்டுவன் ஒரு பகற்பொழுதில் அப்பகைவரை ஒழித்தான்; தன் மைத்துனச் சோழனை நெடுமுடிக்கிள்ளியை அரியாசனத்தில் சரியாக அமர்த்திஞன்; நாட்டில் அமைதி நிலவும் வரை தங்கி இருந்தான்; பிறகு சோழ அரசனிடம் விடைபெற்றுத் தன் நாட்டை அடைந்தான். இந்த உதவியினல் சோழ நாட்டிற்கும் சேர நாட்டிற்கும் இருந்த நெருங்கிய உறவு பின்னும் நெருக்கமாகியது.

---

6. செங்குட்டுவனும் தமிழ்ப்புலவரும்

தமிழ் வளர்த்த வள்ளல்

சேர வேந்தனை செங்குட்டுவன் சிறுவயதில் நன்ருகத் தமிழ் கற்றவன்; ஆதலால் அவன் தமிழ்ப் புலவர்களை அன்போடும் மரியாதையோடும் நடத்தி வந்தான். அவன் தமிழ்ப் புலமையை அளக்கும் ஆற்றல் உடையவன் என்பதைப் பல

நாட்டுப் புலவர்களும் அறிந்தனர்; அதனால் சேர நாடு சென்று அரசனைக் கண்டு தங்கள் புலமையைப் பாக்கள் வாயிலாக வெளிப்படுத்தினர். அரசர் பெருமான் அவரவர் தகுதிக்கு ஏற்ற பரிசுகளை அளித்து மகிழ்வித்து வந்தான். சேரர் பெருமானால் இயல் தமிழ்ப் புலவர்களும் இசைத் தமிழ்ப் புலவர்களான பாணரும் நாடகத் தமிழ்ப் புலவரான கூத்தரும் பெருஞ் சிறப்புப் பெற்றனர். சுருங்கக் கூறின், சேரவேந்தன் முத்தமிழையும் வளர்த்து வந்தான். இங்ஙனம் அவன் புலவர் பலரை ஆதரித்தபோதிலும் அவன் உயிர் நண்பராக அவனால் மதிக்கப்பெற்ற புலவர் இருவர் ஆவர்; ஒருவர் சாத்தனார்; மற்றவர் பரணர்.

சாத்தனார்

சாத்தன் என்பது ஐயனார் என்ற தெய்வத்தின் பெயர். புத்த தேவர்க்குச் சஹஸ்தன் என்னும் பெயர் உண்டு. அது தமிழில் 'சாத்தன்' என்று ஆயிற்று என்றும் கூறுவர். உண்மை எதுவாயினும் சாத்தன் என்பது சிறந்த பெயர். அப்பெயரையுடைய புலவர் திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் சீத்தலை என்னும் கிராமத்தவர் ஆதலால், சீத்தலைச் சாத்தனார் எனப்பட்டார். இவர் தமிழ்ப் புலவர்களான நக்கீரர், கபிலர், பரணர் முதலியவர்களுடன் மதுரையில் தமிழ்ச் சங்கத்தில் இருக்க விரும்பி மதுரையை அடைந்தார். அங்கு நெல், வரகு, சாமை, தினை, கேழ்வரகு முதலிய கூல (தானிய) வகைகளைக் கொண்ட கடை ஒன்றை வைத்தார். அதனால் இவர் **கூலவாணிகன் சீத்தலைச்**

சாத்தனர் என்று அழைக்கப்பட்டார். இவர் பல ஆண்டுகள் மதுரையிலேயே நிலைத்துவிட்ட காரணத்தால் மதுரைக் கூலவாணிகன் — சீத்தலைச் சாத்தனர் என்று பெயர் பெற்றார்.

சாத்தனரும் சேர சகோதரரும்

சாத்தனரது பெரும் புலமையைப் பரணர் முதலிய புலவர்கள் நன்கு அறிந்தார்கள். அவர்கள் மூலமாகச் சாத்தனரைப் பற்றிச் செங்குட்டுவனும் இளங்கோ அடிகளும் கேள்வியுற்றனர்; அப்பெரும் புலவரைக் கண்டு பேச அவாக்கொண்டனர். அங்ஙனமே சாத்தனரும் சேர சகோதரருடைய தமிழ்ப் பற்றையும் தமிழ்ப் புலவர்களை ஆதரிக்கும் தன்மையையும் கேள்வியுற்று அவர்களைக் கண்டு பழக விரும்பினர்; விரும்பியபடியே ஒருநாள் மதுரையை விட்டுப் புறப்பட்டுச் சேர நாட்டை நோக்கி நடந்தார்; பலநாள் வழி நடந்து வஞ்சி மாநகரத்தை அடைந்தார்; அரண்மனையை அணுகிச் செங்குட்டுவனுக்குத் தம் வருகையைத் தெரிவித்தார். 'சாத்தனர்' என்ற பெயரைக் கேட்டவுடன் அரசன் ஓடோடியும் வந்து அவரை மார்புறத் தழுவி அரண்மனைக்குள் அழைத்துச் சென்றான்; அவர் வருகையை இளங்கோ அடிகட்கும் சொல்லி அனுப்பினன்; அவரைத் தன் கோப்பெருந்தேவியாகிய இளங்கோ வேண்மாள் என்பவளுக்கும் அறிமுகம் செய்து வைத்தான்.

யாவரும் உண்ட பிறகு அரண்மனையில் நெடுநேரம் அளவளாவினர். அரச மாதேவி சிறந்த கல்வி அறிவு படைத்தவள்; அரசியல் அறிவும்

உலக அறிவும் பெற்றவள்; குடிகளிடம் தாயன்பு கொண்டவள். அவளிடம் இளங்கோ அடிகள் மிக்க மரியாதை உடையவர். இந்நால்வரும் பாண்டிய நாட்டைப் பற்றியும் தமிழ்ச் சங்க வேலைகளைப் பற்றியும் பிற செய்திகளைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்தனர். சாத்தனார் செங்குட்டுவன் முதலியோரிடம் அளவற்ற அன்பு கொண்டார்; அடிக்கடி சேரநாடு செல்லலானார்; அதனால் செங்குட்டுவனுக்கு உற்ற நண்பர் ஆனார்.

பரணர்

செங்குட்டுவன் பரணரையும் நேசித்து வந்தான். பரணர் சிறந்த தமிழ்ப்புலவர்; நிறைந்த கல்வியும் பரந்த சிந்தையும் விரிந்த நோக்கமும் உடையவர்; பொருள் அழகு நிறைந்த கவிகள் பாடுவதில் சமர்த்தர். அவர் கபிலர் என்ற புலவர்க்கு உயிர் நண்பர்; அதனால் 'கபிலபரணர்' என்று இருவர் பெயர்களையும் சேர்த்து அக்காலப் புலவர் கூறுவாராயினர். பரணர் செங்குட்டுவன் நன்மதிப்பைப் பெற்றவர்; அவனைப் பற்றிப் பத்துப் பாடல்கள் பாடிப் பரிசு பெற்றவர். செங்குட்டுவன் அவரிடம் தன் மைந்தனை ஒப்புவித்தான், பரணர் அந்த இளவரசனுக்கு ஆசிரியராக அமர்ந்தார்.

புலமை நிறைந்த குடும்பம்

இங்ஙனம் செங்குட்டுவனுக்கு நண்பராக அமைந்தவர் அனைவரும் புலமை உடையவரே ஆயினர். அவன் தம்பியோ பெரும் புலவர்; மனைவி

தமிழ் அறிவு நிரம்பியவள்; மகன் பரணர்க்கு மாணவன். இத்தகைய நல்லோர் நடுவில் செங்குட்டுவன் தமிழ்த் தாயின் தவமகனாக விளங்கினான்

---

7. கண்ணகி வரலாறு அறிதல்

மலைவளம் காணப் போதல்

ஒருநாள் சேரன் -செங்குட்டுவன் இன்பமாகப் பொழுதினைப் போக்க விரும்பினான். அதனால் அவன் வஞ்சி மாநகர்க்குப் பக்கத்தில் இருந்த மலைவளம் காணச் சென்றான். அவனுடன் இளங்கோ அடிகளும் அரச மாதேவியும் அமைச்சரும் சேனைத் தலைவரும் போர்வீரர் சிலரும் சென்றனர். அரசன், நான்கு பக்கங்களிலும் வானளாவிய மலைகளுக்கு நடுவில் அமைந்த பள்ளத்தாக்கு ஒன்றில் தங்கினான்.

மலைக்காட்சி

பள்ளத்தாக்கைச் சுற்றிலும் இருந்த மலைகள் மிக்க உயரமானவை. அதனால் அவற்றின்மேல் மேகங்கள் படிந்திருந்தன. காடுகளில் அகில், சந்தனம், தேக்க மரங்கள் அடர்ந்து பருத்து வளர்ந்திருந்தன. அடர்ந்த காடுகளில் யானை, புலி, கரடி, மான் முதலிய விலங்குகள் அங்கும் இங்கும் ஓடிக்கொண்டு இருந்தன. சில இடங்களில் மலை உச்சியிலிருந்து நீர் வீழ்ச்சிகள் தென்பட்டன. மரக்கிளைகளில் மயில்கள் இருந்து நடனமாடின. குயில்

உலக அறிவும் பெற்றவள்; குடிகளிடம் தாயன்பு கொண்டவள். அவளிடம் இளங்கோ அடிகள் மிக்க மரியாதை உடையவர். இந்நால்வரும் பாண்டிய நாட்டைப் பற்றியும் தமிழ்ச் சங்க வேலைகளைப் பற்றியும் பிற செய்திகளைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்தனர். சாத்தனார் செங்குட்டுவன் முதலியோரிடம் அளவற்ற அன்பு கொண்டார்; அடிக்கடி சேரநாடு செல்லலானார்; அதனால் செங்குட்டுவனுக்கு உற்ற நண்பர் ஆனார்.

பரணர்

செங்குட்டுவன் பரணரையும் நேசித்து வந்தான். பரணர் சிறந்த தமிழ்ப்புலவர்; நிறைந்த கல்வியும் பரந்த சிந்தையும் விரிந்த நோக்கமும் உடையவர்; பொருள் அழகு நிறைந்த கவிகள் பாடுவதில் சமர்த்தர். அவர் கபிலர் என்ற புலவர்க்கு உயிர் நண்பர்; அதனால் 'கபிலபரணர்' என்று இருவர் பெயர்களையும் சேர்த்து அக்காலப் புலவர் கூறுவாராயினர். பரணர் செங்குட்டுவன் நன்மதிப்பைப் பெற்றவர்; அவனைப் பற்றிப் பத்துப் பாடல்கள் பாடிப் பரிசு பெற்றவர். செங்குட்டுவன் அவரிடம் தன் மைந்தனை ஒப்புவித்தான், பரணர் அந்த இளவரசனுக்கு ஆசிரியராக அமர்ந்தார்.

புலமை நிறைந்த குடும்பம்

இங்ஙனம் செங்குட்டுவனுக்கு நண்பராக அமைந்தவர் அனைவரும் புலமை உடையவரே ஆயினர். அவன் தம்பியோ பெரும் புலவர்; மனைவி

தமிழ் அறிவு நிரம்பியவள்; மகன் பாணர்க்கு மாணவன். இத்தகைய நல்லோர் நடுவில் செங்குட்டுவன் தமிழ்த் தாயின் தவமகனாகவிளங்கினான்

---

7. கண்ணகி வரலாறு அறிதல்

மலைவளம் காணப் போதல்

ஒருநாள் சேரன் -செங்குட்டுவன் இன்பமாகப் பொழுதினைப் போக்க விரும்பினான். அதனால் அவன் வஞ்சி மாநகர்க்குப் பக்கத்தில் இருந்த மலைவளம் காணச் சென்றான். அவனுடன் இளங்கோ அடிகளும் அரச மாதேவியும் அமைச்சரும் சேனைத் தலைவரும் போர்வீரர் சிலரும் சென்றனர். அரசன், நான்கு பக்கங்களிலும் வானளாவிய மலைகளுக்கு நடுவில் அமைந்த பள்ளத்தாக்கு ஒன்றில் தங்கினான்.

மலைக்காட்சி

பள்ளத்தாக்கைச் சுற்றிலும் இருந்த மலைகள் மிக்க உயரமானவை. அதனால் அவற்றின்மேல் மேகங்கள் படிந்திருந்தன. காடுகளில் அகில், சந்தனம், தேக்க மரங்கள் அடர்ந்து பருத்து வளர்ந்திருந்தன. அடர்ந்த காடுகளில் யானை, புலி, கரடி, மான் முதலிய விலங்குகள் அங்கும் இங்கும் ஓடிக்கொண்டு இருந்தன. சில இடங்களில் மலை உச்சியிலிருந்து நீர் வீழ்ச்சிகள் தென்பட்டன. மரக்கிளைகளில் மயில்கள் இருந்து நடனமாடின. குயில்

உலக அறிவும் பெற்றவள்; குடிகளிடம் தாயன்பு கொண்டவள். அவளிடம் இளங்கோ அடிகள் மிக்க மரியாதை உடையவர். இந்நால்வரும் பாண்டிய நாட்டைப் பற்றியும் தமிழ்ச் சங்க வேலைகளைப் பற்றியும் பிற செய்திகளைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்தனர். சாத்தனார் செங்குட்டுவன் முதலியோரிடம் அளவற்ற அன்பு கொண்டார்; அடிக்கடி சேரநாடு செல்லலானார்; அதனால் செங்குட்டுவனுக்கு உற்ற நண்பர் ஆனார்.

பரணர்

செங்குட்டுவன் பரணரையும் நேசித்து வந்தான். பரணர் சிறந்த தமிழ்ப்புலவர்; நிறைந்த கல்வியும் பரந்த சிந்தையும் விரிந்த நோக்கமும் உடையவர்; பொருள் அழகு நிறைந்த கவிகள் பாடுவதில் சமர்த்தர். அவர் கபிலர் என்ற புலவர்க்கு உயிர் நண்பர்; அதனால் 'கபிலபரணர்' என்று இருவர் பெயர்களையும் சேர்த்து அக்காலப் புலவர் கூறுவாராயினர். பரணர் செங்குட்டுவன் நன்மதிப்பைப் பெற்றவர்; அவனைப் பற்றிப் பத்துப் பாடல்கள் பாடிப் பரிசு பெற்றவர். செங்குட்டுவன் அவரிடம் தன் மைந்தனை ஒப்புவித்தான், பரணர் அந்த இளவரசனுக்கு ஆசிரியராக அமர்ந்தார்.

புலமை நிறைந்த குடும்பம்

இங்ஙனம் செங்குட்டுவனுக்கு நண்பராக அமைந்தவர் அனைவரும் புலமை உடையவரே ஆயினர். அவன் தம்பியோ பெரும் புலவர்; மனைவி

தமிழ் அறிவு நிரம்பியவள்; மகன் பரணர்க்கு மாணவன். இத்தகைய நல்லோர் நடுவில் செங்குட்டுவன் தமிழ்த் தாயின் தவமகனாக விளங்கினான்.

---

7. கண்ணகி வரலாறு அறிதல்

மலைவளம் காணப் போதல்

ஒருநாள் சேரன்-செங்குட்டுவன் இன்பமாகப் பொழுதினைப் போக்க விரும்பினான். அதனால் அவன் வஞ்சி மாநகர்க்குப் பக்கத்தில் இருந்த மலைவளம் காணச் சென்றான். அவனுடன் இளங்கோ அடிகளும் அரச மாதேவியும் அமைச்சரும் சேனைத் தலைவரும் போர்வீரர் சிலரும் சென்றனர். அரசன், நான்கு பக்கங்களிலும் வானளாவிய மலைகளுக்கு நடுவில் அமைந்த பள்ளத்தாக்கு ஒன்றில் தங்கினான்.

மலைக்காட்சி

பள்ளத்தாக்கைச் சுற்றிலும் இருந்த மலைகள் மிக்க உயரமானவை. அதனால் அவற்றின்மேல் மேகங்கள் படிந்திருந்தன. காடுகளில் அகில், சந்தனம், தேக்க மரங்கள் அடர்ந்து பருத்து வளர்ந்திருந்தன. அடர்ந்த காடுகளில் யானை, புலி, கரடி, மான் முதலிய விலங்குகள் அங்கும் இங்கும் ஓடிக் கொண்டு இருந்தன. சில இடங்களில் மலை உச்சியிலிருந்து நீர் வீழ்ச்சிகள் தென்பட்டன. மரக்கிளைகளில் மயில்கள் இருந்து நடனமாடின. குயில்

அரசன் கவலை

அந்த அற்புதச் செய்தியைக் கேட்ட அரசன் முதலியோர் பட்டமரம்போல அசைவற்று இருந்தனர். சில நிமிஷம் கழித்துச் செங்குட்டுவன், "என்ன வியப்பு! நமது நாட்டில் இச்சம்பவம் நிகழ்ந்தது நாம் இதுவரை அறிந்தோம் இல்லை! அப்பத்தினி எந்த நாட்டவளோ? நம் நாட்டவளாக இருந்திருப்பின் நமக்குத் தெரிந்திருக்க வேண்டுமே! அவள் யார்? ஏன் அவள் கணவனை இழந்தாள்! ஏன் இங்கு வந்தாள்? என்பன நம்மால் அறியக்கூடவில்லையே! என்ன செய்வோம்!" என்று கவலைப்பட்டான்.

சாத்தனார் கண்ணகி வரலாறு கூறுதல்

அதுவரை புன்முறுவலோடு வீற்றிருந்த சாத்தனார் அரசனை நோக்கி, "அரசர் பெருமானே, நான் அப்பத்தினி வரலாற்றை அறிவேன்" என்றார். உடனே அனைவரும் மகிழ்ந்து, "புலவரே, எங்களைக் காக்க வையாது உடனே அந்த அற்புத வரலாற்றை உரைத்தருள்க" என்று வேண்டினர். சாத்தனார் கண்ணகி தேவியின் வரலாற்றைச் சுருக்கமாக உரைக்கலானார்.

கண்ணகி வரலாறு

"கண்ணகி வணிகர் மரபினள்; சோழர் தலைநகரான காவிரிப்பூம் பட்டினத்தைச் சேர்ந்தவள். அவள் கணவனான கோவலனும் அதே ஊரினன். இருவரும் மனமொத்து வாழ்ந்து வந்தனர். பின்னர் வினை வசத்தால், கோவலன் மாதவி என்னும்

ஆடல் மகளிடம் அன்பு கொண்டு முன்னோர் தேடி வைத்த செல்வத்தைக் கரைத்து விட்டான்; பிறகு அவளிடம் வெறுப்புக்கொண்டு மனைவியிடம் வந்தான்; வந்து, தான் மதுரை சென்று வாணிகம் செய்ய விரும்புவதாகவும் அதற்கு முதல் வேண்டும் என்றும் கூறினான். கற்புடை மனைவியான கண்ணகி, "என் காற்சிலம்புகளை விற்றுவரும் முதலைக் கொண்டு வாணிகம் செய்க. நானும் உம்முடன் மதுரை வருவேன்" என்றனள். பின்னர் அன்றிரவே இருவரும் புறப்பட்டு மதுரையை நோக்கி நடந்தனர்.

நாட்கள் பல ஆயின. இருவரும் மதுரையை அடைந்தனர். கண்ணகியை ஓர் இடைப்பெண் வீட்டில் விட்டுக் கோவலன் அவளது சிலம்பு ஒன்றை விற்கக் கடை வீதிக்குச் சென்றான். அப்பொழுது அரண்மனைப் பொற்கொல்லன் அங்கு வந்தான். கோவலன் அவனிடம் சிலம்பைக் காட்டினான். அவன், "இஃது அரச மாதேவியர் அணியத்தக்க உயர்ந்த சிலம்பு. இதனை யான் அரசர்க்குக் கூறி வரும்வரை நீ இங்கு இரு" என்று ஓர் இடத்தில் அமரச் செய்து அரண்மனையை நோக்கி நடந்தான். அப்பொழுது அவன், "நான் அரச மாதேவியின் சிலம்பு ஒன்றைக் கவர்ந்து கொண்டேன். அது வெளிப்படு முன் இதனைக் கொணர்ந்தவன் கள்வன் என்று கூறி இவனைக் கொல்லச் செய்தால், இச்சிலம்பை அரசிக்குக் கொடுத்து விடலாம். நானும் தப்பித்துக் கொள்ளலாம்" என்று தனக்குள் கூறிக் கொண்டே அரண்மனையை அடைந்தான்.

அப்பொழுது அரசன் அவசரமாக அந்தப் புரம் போய்க்கொண்டிருந்தான். "அவசரத்தில் காரியத்தை முடிப்பதே நல்லது" என்று எண்ணிய பொற்கொல்லன் அரசனைப் பணிந்து, "பெருமானே, நெடுநாளாகக் காணமற்போயிருந்த அரசியாரது சிலம்பு இன்று அகப்பட்டது. அதனைத் திருடியவன் நம்மிடமே விற்க வந்திருக்கிறான்" என்றான். அரசன் சிறிதும் யோசியாது காவலரை அழைத்து, "இவன் காட்டும் கள்வனைக் கொன்று சிலம்பை நம்மிடம் கொண்டுவருக" என்று கட்டளையிட்டான். உண்மை உணராத காவலர், ஒரு குற்றமும் அறியாத கோவலனைப் பொற்கொல்லன் வற்புறுத்தல்மீது வெட்டிச் சாய்த்தனர். சிலம்பு அரசனிடம் ஒப்படைக்கப்பட்டது.

இச்செய்தியை மாபத்தினியாகிய கண்ணகி அறிந்தாள்; அழுதாள்; விழுந்தாள்; விம்மினாள்; மதுரை நகரத் தெருக்களில் புலம்பிக்கொண்டே சுற்றினாள்; நகரத்தார்க்கு உண்மையை விளக்கினாள்; தன் காதற் கணவன் வெட்டப்பட்டுக் கிடந்த இடத்தை அடைந்தாள்; அவன் உடலைத் தழுவி அழுதாள்; பின்னர், ஆத்திரம் அடங்காதவளாய்ப் பாண்டியனைச் சென்று கண்டாள்; வழக்காடினாள்; தன் காற்சிலம்பு மாணிக்கப் பரலை உடையது என்றாள். அரசன், "எங்கள் சிலம்பு முத்துப்பரலை உடையது. நீ உடைத்துக் காட்டு; உண்மை தெரியலாம்" என்றான். உடனே கண்ணகி தன் சிலம்பை உடைத்தாள். அதனுள் இருந்த மாணிக்கப் பரல்கள் வெளிப்பட்டன. அரசன் நடுங்கினான்; தான் செய்தது பெருங்குற்

றம்—பாவமான செயல் என்பதை உணர்ந்தான்; ஆவி சோர்ந்து விழுந்து பிணமானன். அவனது கோப்பெருந்தேவியும் கீழே விழுந்து மூர்ச்சை யானுள்; பின்னர் அவளும் பிணமானுள்.

பின்னரும் சீற்றம் தணியாத கண்ணகி தேவி தன் கற்பின் மகிமையால் மதுரையை எரித்தாள். அப்பொழுது மதுரை நகரத்தின் தேவதை அவ ளைக் குறுகி, "உன் கணவன் முன் பிறப்பில் செய்த பாபத்தின் பயனை இப்பிறப்பில் அநுப வித்தான். நீ இதற்காகக் கவலைப்படாதே. நீ பதினன்காம் நாள் நின் கணவனைக் காண்பாய்; அவனோடு வானுலகம் செல்வாய்" என்று கூறி யது.

பின்னர்க் கண்ணகி மதுரை நகரத்தின் மேற்கு வாசல் வழியே வைகையாற்றின் கரை ஓர மாக மேற்கு நோக்கிச் சென்றாள்; பல மலைகளைக் கடந்தாள்; இறுதியாகக் குறவர் குறித்த மலையில் வேங்கை மரத்தடியில்வந்து நின்றாள்; பதினன்காம் நாள் கணவனுடன் மேல் உலகம் சென்றாள்."

கோவில் எடுக்க யோசனை

இந்த அற்புத வரலாற்றைக் கேட்ட அரசன் தன் மாதேவியைப் பார்த்து, "பாண்டியனுடன் இறந்த கோப்பெருந்தேவி போற்றத் தக்கவளா? கண்ணகி தேவி போற்றத்தக்கவளா?" என்று கேட்டான். உடனே அவள், "இருவரும் பத்தினி களே; ஆயினும் நம் நாடு வந்து சுவர்க்கம் புகுந்த மாபத்தினிக்குக் கோவில் கட்டி அவளை வழிபட வேண்டுவது நமது கடமை ஆகும்" என்றனள்.

அவள் யோசனையை எல்லோரும் ஏற்றுக்கொண்டனர்.

வடநாடு செல்ல முடிவு

செங்குட்டுவன், "பத்தினியின் உருவத்தைச் சமைக்கக் கல் வேண்டும். அதனை முன்போல இமய மலையிலிருந்து எடுத்து வருவதே சிறந்தது. நான் எனது இருபதாம் வயதில்-முப்பது ஆண்டுகட்கு முன்னால்—என் தாயார் உருவம் சமைக்கக் கல் கொண்டு வந்த பொழுது வடநாட்டு அரசர் தோற்றோடினர். அதைப்பற்றிச் சென்ற ஆண்டில் வடநாட்டு அரசர் சிலர் என்னை நகையாடினராம். 'நாங்கள் அப்பொழுது இல்லை. சேரன் எளிதில் எல்லோரையும் வென்று மீண்டான். இப்பொழுது வரட்டும், பார்ப்போம்' என்று வீரம் கூறினராம். ஆதலின் இப்பொழுது சென்று அவர்கள் வீரத்தை நான் காணவேண்டும். நமது நாட்டில் இச்செய்தியை அறிவித்துப் படைகளைத் தயார் செய்க" என்று அனைவர் முன்னிலையிலும் சேனைத் தலைவர்க்குக் கட்டளையிட்டான்.

வடநாட்டு யாத்திரை

வடநாட்டு யாத்திரைக்குரிய நல்ல நாளில் செங்குட்டுவன் தன் பண்பட்ட படைகளுடன் வடக்கு நோக்கிப் புறப்பட்டான்; சிலநாள் கழித்து நீலகிரி மலையில் தங்கினான். அப்பொழுது பல நாட்டரசர் அவனுக்குப் பொருள்கள் பல அனுப்பி உதவினர்; சாதவாஹன அரசர்கள் கங்கைக்கரையில் நூற்றுக்கணக்கான படகுகளைத் தயார் செய்து வைத்தனர்.

செங்குட்டுவன் கங்கைக் கரைவரை கவலையின்றிச் சென்றான்; சாதவாஹன அரசர் உதவியால் அக்கரையை அடைந்தான். அவன் உத்தர கோசல நாட்டின் வழியே சென்ற பொழுது கனக-விசயர் என்ற அரசர் தலைமையில் சிற்றரசர் பலர் ஒன்றுகூடிச் சேரனை எதிர்த்தனர். அவர்களே செங்குட்டுவனைப் பழித்தவர்கள். ஆதலால் செங்குட்டுவன் வீராவேசம் கொண்டு அவர்கள் படை மீது பாய்ந்தான்; பதினெட்டு நாழிகை நேரம் போர் நடந்தது. பகைவர் படையாகிய கடலில் சேரனுகிய மரக்கலம் தடையின்றி ஓடிற்று. பண்பட்ட சேரவீரர் எதிரிகளைக் கொன்று குவித்தனர். செங்குட்டுவன் "தமிழர் வீரத்தைக் காண்போம்" என்று பரிகசித்த கனகனையும் விசனையும் சிறைப் பிடித்து, மற்றவரை மன்னித்து விட்டு விட்டான்; இமயத்திலிருந்து கொண்டு வரப்பட்ட கல்லைக் கங்கையில் நீராட்டிக் கனகவிசயர் முடிமீது வைத்து வஞ்சி மாநகர்க்கு மீண்டான்.

---

8. கோவில் எடுத்து விழாச்செய்தல்

நகரத்தில் கொண்டாட்டம்

தங்கள் அரசனான செங்குட்டுவன் வட அரசரை வென்று இமயத்திலிருந்து கல்லைக் கொணர்ந்தான் என்ற செய்தி காட்டுத்தீப்போல நகரமெங்கும் பரவியது. குடிகள் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தனர்; அரசனை வரவேற்க நகரத்தை அலங்கரித்தனர்; அங்கங்கு ஆடல் — பாடல்களை

இகழ்த்தினர்; மங்கையர், "சேரன்-செங்குட்டுவன் நீடுழி வாழ்க!" என்று வாழ்த்தினர். கோவில்களில் சிறப்புப் பூசைகள் குறைவற நடந்தன. செங்குட்டுவன் புறப்பட்ட நாள்முதல் வந்து சேர்ந்த நாள்வரை - பதினெட்டு மாதங்கள் தனியே இருந்து துன்புற்ற இளங்கோ வேண்மாள் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை. இளங்கோ அடிகள் தம் தமையனைக் கண்டு எல்லா விவரங்களையும் கேட்டு அறிந்தார். நகரமக்கள் மகிழ்ச்சியையும் செங்குட்டுவன் சிறப்பையும் நேரில் அறிந்த கனக-விசயர் தாம் அறியாது அவனை இகழ்ந்து பேசியதற்கு மனம் வருந்தினர். அரசன் அவ் வட நாட்டு அரசர்களை அன்புடனும் மரியாதையுடனும் நடத்திவந்தான்.

பத்தினிக்குக் கோவில்

அரசன் ஏவலால் அந்தணர், புரோகிதர், சோதிடர், சிற்பிகள் என்பவர் கண்ணகி தேவிக்குச் சிறப்புறக் கோவில் ஒன்றை எடுப்பித்தனர். சிற்ப வல்லுநர் பத்தினியின் திருவுருவத்தைக் கல்லிற் செதுக்கி அவளது பெயரும் பெருமையும் பொறித்தனர். பின்னர் அந்த அம்மன் சிலை ஆடை அணிகளால் அலங்கரிக்கப்பட்டது. பிறகு அர்ச்சனைகள் நடைபெற்றன; திக்குத்தேவதைகள் கடைவாயிலில் தாபிக்கப்பட்டன. பத்தினிக் கடவுள் சிலை கோவிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

பத்தினி விழா

பின்னர் விழாச் சிறப்பாக நடைபெற்றது. காவிரிப்பூம் பட்டினத்தில் இருந்து கண்ணகியின்



கண்ணகி ‧ தேவி

செவிலித்தாய், தேவந்தி என்ற பார்ப்பனத்தோழி முதலியோர் அங்குவந்து அரசனிடம் தங்கள் வரலாற்றைக் கூறிப் பத்தினி தேவியைத் தொழுதனர். அப்பொழுது பொற்சிலம்பும் மேகலாபரணமும் கைவளைகளும் வயிரத் தோடுகளும் அணிந்த மின்னற்கொடி போன்ற உருவம் ஒன்று விண்ணில் பளிச்சென்று தோன்றியது. அதனைக் கண்ட செங்குட்டுவன் வியப்புற்றான். அப்பொழுது அத்தெய்வம், "என் கணவனைக்கொன்ற பாண்டியன் குற்றமற்றவன். நான் அவன் மகள். நான் இம்மலையில் விளையாடிக்கொண்டு இருப்பேன். நீங்களும் என்னுடன் விளையாட வாருங்கள்" என்று கூறியது. அதுகேட்ட பெண்மணிகள் மேலும் அத் தெய்வத்தைத் தோத்தரித்தனர்.

வாழ்த்துரை

இந்த அற்புதத்தைக் கண்டவர் அதிசயம் அடைந்தனர். அவருள் இலங்கை அரசனான கயவாகு ஒருவன். அவனும் பிற அரசர்களும் அம்மனைப் பார்த்து, "தாயே, நாங்கள் எங்கள் நாடுகளில் உனக்குக் கோவில் எடுப்பிப்போம். நீ அங்கு எழுந்தருளல் வேண்டும்" என்று வேண்டினர். பத்தினிக்கடவுள் "அவ்வாறே ஆகுக" என்று வரம் ஈந்தது. அது முடிவில் "செங்குட்டுவன் வாழ்க!" என்று வாழ்த்தி மறைந்தது. அப்பொழுது செங்குட்டுவன் உடம்பு சிலிர்த்தது. கண்களில் இருந்து ஆனந்தக் கண்ணீர் வெளிப்பட்டது.

பின்னர்ச் செங்குட்டுவன் கோவிலில் பூசையும் விழாவும் குறைவற நடப்பதற்காகப் பல நிலங்களை

மானியமாக விட்டான்; விலையுயர்ந்த நகைகளையும் பட்டாடைகளையும் அம்மனுக்கு உதவினான்; தேவந்தி என்ற கண்ணகி தேவியின் தோழியையே பூசை செய்து வரும்படி ஏற்பாடு செய்தான்.

பல கோவில்கள்

கயவாகு முதலிய அரசர் இலங்கை முதலிய இடங்களில் பத்தினிக் கடவுளுக்குக் கோவில் கட்டி விழாச் செய்தனர். கயவாகு செய்வித்த பத்தினி அம்மன் சிலை இன்று இங்கிலாந்தில் பிரிட்டிஷ் பொருட்காட்சிச் சாலையில் இருக்கிறது. பல நாடுகளில் 'பத்தினிக் கோவில்' என்ற பெயர் 'பைதனி கோவில்' என்று மருவி வழங்குகின்றது. மலையாளத்தில் இக்கோவில் 'பகவதி கோவில்' என்று கூறப்படுகிறது. மதுரையில் கண்ணகித் தெய்வத்திற்கு ஒரு கோவில் உண்டு. அதனை இன்றும் காணலாம்.

சிலப்பதிகாரம்

இளங்கோ அடிகள் சாத்தனார் மூலமாகக் கேட்ட கண்ணகி வரலாற்றையும், மாடலன்—தேவந்தி முதலியோர் வாயிலாகக் கேட்ட கண்ணகி வரலாற்றையும், இறுதியில் தாம் இருந்தபொழுது குன்றக் குறவர் வந்து சொன்ன அற்புதச் செய்தியையும் கேட்டறிந்தவர்; இவற்றிற்குப் பிறகு தம் தமையன் வடநாட்டு யாத்திரையைக் கண்ணாரக் கண்டவர்; வடநாட்டில் நடந்த செய்திகளைத் தமையன் கூறக் கேட்டவர்; பின்னர் நடந்த நிகழ்ச்சிகளைத் தாமே நேரில் இருந்து தரிசித்தவர். ஆத

லால் அவர் கண்ணகி வரலாற்றை ஒரு சிறந்த காவியமாகப் பாடினார்; அது சிலம்பின் வரலாறு ஆதலால் அதற்குச் சிலப்பதிகாரம் என்று பெயர் இட்டார். அந்நூலிலிருந்து நாம் செங்குட்டுவன் வரலாற்றை அறிகிறோம்.

சிலப்பதிகாரச் சிறப்பு

இளங்கோ அடிகள் செய்த சிலப்பதிகாரம் சாத்தனார் முன்பு அரங்கேற்றப்பட்டது. சிலப்பதிகாரம் தமிழிற் சிறந்த காவியம். அது இயல்-இசை-நாடகம் என்னும் முத்தமிழும் கலந்துவரச் செய்யப்பட்ட நூல். அதனில் சேர-சோழ-பாண்டிய நாடுகள், அவற்றின் தலைநகரங்கள், மலைநாடு, காட்டு நாடு, வயல்கள் நிறைந்த மருத நிலம், கடற்கரை, பாலைநிலம் எனப்பட்ட ஐந்து நிலங்களைப்பற்றிய செய்திகள், விழாக்கள், வழிபாடுகள் முதலியன விளக்கமாகக் குறிக்கப்பட்டுள்ளன. பாண்டிய அரசன், சேர அரசன் வரலாறுகள் குறிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு தமிழ் நாட்டைப் பற்றிய பல அம்சங்களும் ஒழுங்கே பெற்ற காவியம் இஃது ஒன்றே என்று கூறலாம்.

மணிமேகலை

சிலப்பதிகாரம் கோவலன் - கண்ணகி வரலாறு கூறுவது. இது கண்ட சாத்தனார் கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மணிமேகலை என்னும் பெண்ணைப்பற்றி அவள் பெயரால் ஒரு காவியம் செய்தார். மணிமேகலை பௌத்த மதத்தைத் தழுவி அன்னதானம் செய்து தமிழ்நாட்டில் மிக்க

புகழ் பெற்றவள். அவள் வரலாறு கூறுவதே மணிமேகலை என்னும் பெருங்காவியம். அந்நூல் இளங்கோ அடிகள் திருமுன் அரங்கேற்றம் செய்யப்பட்டது.

செங்குட்டுவன் குணநலன்கள்

சேரர் பெருமானான செங்குட்டுவன் காலம் ஏறத்தாழக் கி. பி. 2-ஆம் நூற்றாண்டு (கி. பி. 150-200) என்னலாம். அந்த நூற்றாண்டில் அவனே தமிழ் நாட்டில் பேரரசனாக விளங்கியவன்; இமயம் வரை சென்று வெற்றிபெற்று மீண்டவன்; வீரத்தில் சிறந்திருந்தாற்போலவே நல்ல ஒழுக்கத்திலும் கடவுள் பக்தியிலும் சிறந்து விளங்கினான்; தாய்மொழி ஆகிய தமிழைப் போற்றினான்; தமிழர் வீரம் வாய்ந்தவர் என்பதை வட இந்தியர்க்கு உணர்த்தினான். சேரவேந்தன் சிறந்த சிவபக்தன் ஆயினும் எல்லாச் சமயங்களையும் சமமாகவே மதித்துக் கௌரவித்தான். சேரர் பெருமான், கிருஷ்ணா நதியிலிருந்து கங்கா நதிவரை பேரரசராக இருந்த சாதவாஹன அரசர் கௌரவிக்கத் தக்க உயர்நிலையில் இருந்தான் எனின், அப்பெருமகனது குணநலன்களை என்னென்பது! அப் பெருமகன் திருப்பெயர், சிலப்பதிகாரம் உள்ள அளவும் நாட்டில் நிலைத்திருக்கும். தமிழ் இளைஞராகிய உங்கட்குச் செங்குட்டுவ மன்னன் வரலாறு வீரவுணர்ச்சியையும் தமிழ் உணர்ச்சியையும் ஊட்டுகின்றது அல்லவா?

பல்லவன்
நரசிம்மவர்மன்


நரசிம்மவர்மன் காலத்திய
பல்லவப் பேரரசு
[கி.பி. 630-668]
ஹர்ஷன் பேரரசு
மேலைச் சாளுக்கியர்
கோதாவரி
கீழைச் சாளுக்கியர்
கிருஷ்ணா
வாதாபி
கதம்பர்
கங்கர்
காஞ்சிபுரம்
மகாபலிபுரம்
மதுரை
இலங்கை

2. பல்லவன் - நரசிம்மவர்மன்

1. இளவரசன்

பல்லவர்

பல்லவர் என்பவர் கி. பி. மூன்றும் நூற்றுண்டின் தொடக்கத்தில் தொண்டை நாட்டைக் கைப்பற்றிய புதியவர் ஆவர். 'அர்கள் பாரசிகத்திலிருந்து வந்து இந்தியாவின் பல பாகங்களில் தங்கி இந்துக்களாக மாறியவர்கள்; ஆந்திரப் பேரரசரிடம் மாகாணத் தலைவர்களாக இருந்து, படிப்படியாகக் கிருஷ்ணை யாறு முதல் பாலாறு வரை தங்கள் அரசை ஏற்படுத்திக் கொண்டவர்கள்' என்று ஆராய்ச்சிக்காரர் கூறுகின்றனர். மூன்றும் நூற்றுண்டு முதல் ஆரும் நூற்றுண்டு முடியப் பல்லவர்கள் சேர - சோழ - பாண்டியருடனும் கங்கர், கதம்பர் முதலிய அரசர்களுடனும் ஓயாது போரிட வேண்டியவர் ஆயினர். கி. பி. எழாம் நூற்றுண்டு முதலே அவர்கள் காஞ்சியில் இருந்து கொண்டு நிலையான அரசு செலுத்த முடிந்தது

மஹேந்திரவர்மன்

அங்ஙனம் நிலைத்த அரசு செலுத்திய பல்லவருள் முதல் அரசன் மஹேந்திரவர்மன். இவன் காலத்தில் பல்லவர் ஆட்சி வடக்கே கிருஷ்ணையாறு முதல் தெற்கே புதுக்கோட்டை வரை பரவி இருந்தது. இவன் வடமொழிப் புலவன்; இசைப் புலவன்; நாடகப் புலவன்; நடனப் பிரியன்; சிற்ப-ஓவியக் கலைஞன். இவன் குன்றுகளைக் குடைந்து கோவில்களை அமைத்த பெருமை உடையவன். இவன் அமைத்த குகைக் கோவில்களை

மஹேந்திரவாடி, தளவானூர், சீயமங்கலம், வல்லம் முதலிய இடங்களில் இன்றும் காணலாம்.

இப்பெருமகன் முதலில் சமணனாக இருந்தான்; பின்னர்ச் சைவனாக மாறினான். இவன் திருநாவுக்கரசர் காலத்தவன்; அவரை முதலில் துன்புறுத்தினான்; பிறகு அவர் வழிப்பட்டுச் சைவ சமயத்தை வளர்த்தான்; சிவன் கோவில்களை அமைத்தான்; பல அறங்கள் செய்தான்.

பல்லவர்-சாளுக்கியர் போர்

இப்பேரரசன் பெற்ற செல்வ மைந்தனே நமது வரலாற்றுத் தலைவனான நரசிம்மவர்மன். மஹேந்திரன் தன்னைப் போலவே தன் செல்வ மகனையும் சிறந்த புலவனாகவும் கலை விற்பன்னனாகவும் செய்தான்; சிறந்த போர் வீரனாகவும் ஆக்கினான்; அவனுக்கு இளவரசுப் பட்டம் கட்டினான்.

இங்ஙனம் தந்தையும் மகனும் நாடு ஆட்சியைக் கவனித்து வருகையில் இரண்டாம் புலிகேசி என்பவன் பல்லவ நாட்டின்மீது படையெடுத்தான். இரண்டாம் புலிகேசி யாவன்? அவன் இன்றைய பம்பாய் மாகாணமாகவுள்ள பழைய சாளுக்கிய நாட்டிற்குத் தலைவன்; வடநாட்டு ஹர்ஷவர்த்தனைத் தோற்கடித்த பெருவீரன்; அஞ்சா நெஞ்சம் படைத்தவன்; சிறந்த போர் வீரன். அவன் பல்லவரது செல்வாக்கை ஒழிக்க விரும்பியே பல்லவ நாட்டின்மீது படையெடுத்தான்.

புலிகேசியின் படை பல்லவ நாட்டிற் புகுந்து வெற்றி முழக்கத்துடன் வந்துவிட்டது. மஹேந்திரவர்மன், பகைவரைத் தடைசெய்யாது தன்

தலை நகரம் வரும்வரை விட்டுவிட்டான்; பகைவர் காஞ்சி நகரத்தை அடைந்ததும் கோட்டைக்குள் ஒளிந்துகொண்டான். இரண்டாம் புலிகேசி பல்லவ நாட்டின் தென் பகுதியான காவிரியாறு வரை சென்று வெற்றி முழக்கத்துடன் மீண்டான். அவன் காஞ்சிக்கு அருகில் வந்தவுடன் மகேந்திரன் அவனைத் திடீரெனத் தாக்கிக் கடும்போர் செய்தான்; சாளுக்கியர் படையைக் கலக்கினான். பகைவரது உள் நாட்டில் எதிர்பாரா வண்ணம் அகப்பட்டுக்கொண்ட சாளுக்கியர் படை பலவாறு ஓடத் தொடங்கியது. மகேந்திரன் இரண்டாம் புலிகேசியைத் தன் நாட்டிற்கு அப்பால் துரத்தி அடித்தான். இந்தப் பெரும் போரில் நரசிம்மவர்மன் நல்ல பயிற்சி பெற்றான். பகைவனைத் தன் நாட்டின் நடு இடத்திற்கு வரச் செய்து அவனை நாலாப் பக்கங்களிலும் சூழ்ந்து அழிப்பதே பல்லவர் பொதுவாகக் கொண்ட போர்த் தந்திரம் ஆகும். இத்தந்திரத்தால் ஒவ்வொரு பல்லவ அரசனும் வெற்றி பெற்றான்.

தந்தையிடம் பயிற்சி

மகேந்திரவர்மன் சிவபக்தன். அவன் தந்தையான சிம்மவிஷ்ணு சிறந்த வைணவன். எனினும் இந்த இரண்டு அரசரும் பிற சமயங்களைச் சமமாகவே மதித்து நடத்தி வந்தனர். இந்த உயரிய மனப்போக்கை நரசிம்மவர்மன் நன்கு கவனித்தான்; தன் தந்தை குடைந்த குகைக் கோவில்களைக் கண்டான்; உடனிருந்து அவன் மேற்கொண்ட எல்லா அரசியல் காரியங்களையும் ஊக்கத்துடன் கவனித்து வந்தான்.

2. நரசிம்மவர்மன் - பல்லவ மன்னன்



நரசிம்மவர்மன்

இவன் ஏறத்தாழக் கி. பி. 630-ல் அரியணை ஏறினான். இவன் ஆட்சிக்காலம் தென் இந்திய வரலாற்றில் சிறப்பு இடம் பெறத்தக்கது. இவன் காலத்தில் தான் புகழ்பெற்ற இரண்டாம் புலிகேசி - ஹர்ஷனைத் தோற்கடித்த புலிகேசி போரில் முறியடிக்கப்பட்டான்; அவன் தலைநகரமான வாதாபி பிடிக்கப்பட்டது. உலகப் புகழ் பெற்ற கடல் மல்லை 'மஹாமல்லபுரம்' ஆகச் சிறப்புப் பெற்றது; இலங்கைப் படையெடுப்பு நடந்தது. பாராட்டுக்கு உரிய சீன யாத்திரிகரான ஹியூன்-ஸங் பல்லவ நாட்டிற்கு வந்து சென்றார். இப்பேரரசன் காலத்திற்றான் திருநாவுக்கரசரும் திருஞான

சம்பந்தரும் சைவ சமயத்தைப் பற்றித் தமிழ் நாடு முழுவதும் பலமாகப் பிரசாரம் செய்தனர்.

விருதுப் பெயர்கள்

மஹா மல்லன், ஸ்ரீபரன், ஸ்ரீமேகன், ஸ்ரீநிதி, ரணஜயன் முதலிய விருதுப்பெயர்களை நரசிம்மவர்மன் நாளடைவில் பெற்றான்.

---

3. வாதாபி கொண்டது

போருக்குக் காரணங்கள்

மஹேந்திரவர்மன் காலத்தில் இரண்டாம் புலிகேசி தோற்றது முதற் காரணம். நரசிம்மவர்மன் இளைஞன் என்பது மற்றொரு காரணம். பல்லவப் பேரரசினது பலம் ஒடுங்கவேண்டும் என்பது மூன்றாம் காரணம். இம்மூன்று காரணங்களையும் உளங்கொண்டு இரண்டாம் புலிகேசி முன்போலவே பல்லவ நாட்டின்மீது படையெடுத்து வந்தான்

போர் நிகழ்ச்சிகள்

பகைவன் பெரும் படையுடன் வருவதை அறிந்த நரசிம்மவர்மன் தன் தந்தை செய்தவாறே அவனைத் தாராளமாக உள்ளே வர விட்டான். அதனால் எதிர்ப்பின்றிப் புலிகேசி காஞ்சிவரை வந்தான். அவன் பல்லவனை எளிதாக எண்ணியதே பெருந்தவறு.

பல்லவர் - சாளுக்கியர் போர் மூன்று இடங்களில் நடைபெற்றது. பல்லவன் சாளுக்கியனைத் தாக்கக் காஞ்சியைச் சுற்றிப் பல இடங்களில் தக்க

படைகளை வைத்திருந்தான். முதற் போர் பரியலம் என்னும் இடத்தில் நடந்தது. பல்லவன் சாளுக்கியனை நாற்புறமும் வளைத்துக்கொண்டான். இரு திறத்தார்க்கும் கடும்போர் நடந்தது. பல்லவ மன்னனுக்குப் புதிய படைகள் வந்த வண்ணம் இருந்தன. அதே சமயத்தில் சாளுக்கியன் படைகள் குறைந்துகொண்டே வந்தன. இரண்டாம் போர் மணிமங்கலம் என்னும் இடத்தில் நடந்தது. அப்போர் மிகவும் கடுமையானது. பல்லவ மன்னன் யானைக் கூட்டத்தில் பாயும் சிங்கக் குட்டிப் போலப் பகைவர் சேனைக்குட் பாய்ந்து வீரர்களை வெட்டிச் சாய்த்தான்; பல்லவ நாட்டு வீரர் தம் அரசன் வீராவேசத்தைக் கண்டு வியந்து ஆவேசம் கொண்டு உயிரைத் துரும்பாக எண்ணிப் போரிட்டனர். புலிகேசி பின் வாங்கினன். மூன்றாம் போர் சூரமாரம் என்னும் இடத்தில் நடந்தது. அங்கு நடைபெற்ற போரே மிகவும் கொடியது. அப் போரில் சாளுக்கியன் முற்றிலும் முறியடிக்கப் பட்டான். அவன் சேனை சிதறுண்டது. புலிகேசி சிதறுண்ட தன் சேனையோடு தன் நாடு நோக்கி ஓடலானன்.

வாதாபி கொண்டது

இவ்வாறு முதுகு காட்டி ஓடத் தொடங்கிய பகைவனைப் பல்லவ மன்னன் விடவில்லை. அவன் படைத் தலைவரைப் பகைவனைத் துரத்திச் செல்லுமாறு ஏவினன். அத்தானைத் தலைவர் தம் பெரும் படையுடன் சாளுக்கியனைப் பின் பற்றினர். சாளுக்கியன் பல்லவ நாடு கடந்து தன் நாட்டிற்குள் புகுந்

தான். பல்லவர் படை அவனை அங்கும் விடாமல் துரத்திச் சென்றது; அவன் தலைநகரமான வாதா பியை அழித்தது; அதனைக் கைப்பற்றிக் கொண் டது. இவ்வாறு வாதாபி பிடிபட்ட காலம் கி. பி. 642 ஆகும். அது முதல் பதின்மூன்று வருட காலம் அந்நகரம் பல்லவர் ஆட்சியில் இருந்தது. வாதாபி நகரில் நரசிம்மவர்மன் வெற்றித்தூண் ஒன்று நாட்டப்பட்டது. அந்த வெற்றிக்குப் பிறகு நரசிம்மவர்மன் 'வாதாபி கொண்ட நரசிம்மவர்மன்' என்று அழைக்கப்பட்டான்.

பல்லவர் படைத்தலைவர் யார்?

வாதாபியை அழித்த பல்லவர் படைத்தலைவர் யார்? அவரே அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவராகிய **பரஞ்சோதியார்** எனப்பட்ட சிறந்தொண்டர். அவர் வடமொழி-தென் மொழிகளில் வல்லவர்; மருத்துவத்திலும் சிறந்த அறிவுபெற்றவர்; படைக் கலப் பயிற்சியில் இணையற்றவர்; சிறந்த சிவபக்தர். அவர் யானைகளைச் செலுத்திச் சாளுக்கியர் தலைநக ரான சிறப்பு மிக்க வாதாபியை அழித்தார்; அந் நகரத்தில் இருந்த அரசாங்கப் பண்டாரத்தையும் (பொக்கிஷ சாலையையும்) பகைவருடைய யானை களையும் குதிரைகளையும் கைப்பற்றி மீண்டார். இவ்விவரங்கள் **சேக்கிழார் பெருமான்** பாடிய திருத் தொண்டர் புராணத்தில் காணப்படுகின்றன.

4. பல்லவர்-பாண்டியர் போர்

காரணம்

பல்லவர் தமிழ் நாட்டைக் கவர்ந்து ஆண்டு வந்த புதிய அரசர் அல்லவா? அதனால் பல்லவரைத் தாக்கி அழிக்கச் சோழரும் பாண்டியரும் நல்ல சமயத்தை எதிர்நோக்கி இருந்தனர். சாளுக்கியன் படையெடுத்த சமயமே தாங்களும் பல்லவனைத் தாக்க ஏற்ற சமயம் என்று அவர்கள் கருதினர். சோழர் வலியிழந்து சிற்றரசராக இருந்தனர். ஆயினும் அவர்கள் பேரரசரான பாண்டியருடன் பெண் கொடுக்கல்-வாங்கல் செய்து உறவு கொண்டாடினர். நரசிம்மவர்மன் காலத்தில் இருந்த பாண்டிய அரசன் நெடுமாறன் என்பவன். அவன் **மங்கையர்க்கரசியார்** என்ற சோழர் மகளாரை மணந்திருந்தான். அவன், எப்படியாவது பல்லவனை வென்று சோழநாட்டைத் தன் மாமனார்க்கு மீட்டுத் தரவேண்டும் என்று விரும்பினான். இக்காரணங்களால் நெடுமாறன், புலிகேசி பல்லவனைத் தாக்கிப் போர் செய்துகொண்டு இருந்த நெருக்கடியான சமயத்தில் திடீரெனப் பல்லவ நாட்டைத் தாக்கினான்.

போர்

நரசிம்மவர்மன் தமிழ் அரசரை ஒரு பொருளாக மதிக்கவில்லை. அவன் கருத்தெல்லாம் தன்னை ஒத்த சாளுக்கியனைத் தோற்கடிக்க வேண்டும் என்பதிலேயே சென்றது. எனினும், தமிழ் அரசரை அடக்கவேண்டும் அல்லவா? அதற்காக

அவன் தன் படைத்தலைவன் ஒருவனைத் தெற்கே அனுப்பினான். அந்தப் படைவீரன் ஒரு படையுடன் தெற்கு நோக்கிச் சென்றான். அவனுக்கும் நெடுமாறனுக்கும் சங்கரமங்கை என்னும் இடத்தில் போர் நடந்தது. நெடுமாறன் சிறந்த போர்வீரன் ஆதலால் பல்லவன் அலக்ஷியமாகத் தன் மீது அனுப்பிய படையைத் தோற்கடித்தான். ஆனால் அதற்குள் பல்லவன் சாளுக்கியனைத் தோற்கடித்துச் சிறுத்தொண்டரை அவன்பின் அனுப்பிவிட்டுத் தெற்கு நோக்கிச் சென்றான்; சோழனையும் பாண்டியனையும் போரில் முறியடித்துத் தன் நாட்டு எல்லைக்கு அப்பால் துரத்தி அடித்தான். இவ்வாறு பல்லவர் - பாண்டவர் போர் நடந்த காலம் கி. பி. 642 என்னலாம்.

முடிவு

இப்போரில் ஒருவர்க்கும் நஷ்டம் இல்லை. பல்லவன் ஏக காலத்தில் சாளுக்கியரையும் தமிழ் அரசரையும் தோற்கடிக்கும் சக்தி பெற்றவன் என்பதைத் தமிழ் அரசர் நன்கு உணர்ந்தனர்; அதனால் அமைதியோடு வாழலாயினர். பல்லவனும், 'இனித் தமிழரசர் தொல்லை நமக்கு ஏற்படாது' என்று மன அமைதி பெற்றான்.

---

5. இலங்கைப் படையெடுப்பு

மானவன்மன்

நரசிம்மவர்மன் காலத்தில் இலங்கையை மானவன்மன் என்பவன் அரசாண்டு வந்தான். அட்டதத்தன் என்ற வேறோர் அரசன் அவனைத் திட

னைத் தாக்கி இலங்கையைக் கைப்பற்றிக்கொண்டான். நாட்டை இழந்த மானவன்மன் காஞ்சியை அடைந்தான்; அக்காலத்தில் மஹா மல்லனாக விளங்கிய நரசிம்மவர்மனிடம் அடைக்கலம் புகுந்தான்; தன் நடை - உடை - பாவனைகளால் அவன் உள்ளத்தைக் கவர்ந்தான்; பல்லவர் - சாளுக்கியர் போரில் சிறந்த பங்கு எடுத்துக்கொண்டு, பல்லவனுக்கு உதவி செய்தான். நரசிம்மவர்மன் மானவன்மன்மீது மிக்க பற்றுக்கொண்டு அவனுக்கு உதவி செய்யத் தீர்மானித்தான்.

முதல் படையெடுப்பு

மஹா மல்லனான நரசிம்மவர்மன் தன் கப்பற் படையின் ஒரு பகுதியை மானவன்மனுக்கு உதவியாக அனுப்பினான். படைவீரர் மஹா மல்லபுரம் (கடல்மல்லை) சென்று கப்பல்களில் ஏறிச் சென்றனர். மானவன்மன் பல்லவன் படையுடன் சென்று இலங்கைத் தீவில் இறங்கினான்; அட்டதத்தனுடன் போர் செய்தான்; முதலில் நடந்த போரில் தோல்வி யுற்றான். அதனால் மானவன்மன் காஞ்சி மீண்டான்.

இரண்டாம் படையெடுப்பு

தன் நண்பன் சென்று பயன் பெறாததைக் கேள்வியுற்ற மஹா மல்லன் வருந்தினான்; தன்னிடம் இருந்த பண்பட்ட வீரர்களைத் துறைமுகத்திற் கூட்டினான்; தானும் கப்பலில் வருவதாகப் போக்குக் காட்டினான். தம் அரசனும் உடன் வருவதாக எண்ணிய பல்லவ வீரர் மிக்க மகிழ்ச்சி

யுடன் கப்பல்களில் ஏறினர்; இலங்கையிற் சென்று இறங்கினர்; தம் மன்னன் கப்பலில் இருப்பதாகவே எண்ணி உற்சாகத்துடன் போர் புரிந்தனர். போர் விரைவில் முடிந்தது. மானவன்மன் வெற்றி பெற்று அரியணை ஏறினன். அவன் பல்லவப் படை வீரர்க்கு வேண்டிய அளவு பரிசளித்து மகிழ்வித்தான்.

---

6. சீன யாத்திரிகர் ஹியூன் - ஸங்

சீன யாத்திரிகர்

சீனத்தில் பௌத்த மதம் பரவியதும், அங்குப் பௌத்த மதத்தைத் தழுவிய துறவிகள் புத்தபகவான் அவதரித்த இந்தியாவில் யாத்திரை செய்ய விரும்பினர்; புத்தர் பிறந்த இடம் - இருந்த இடம் - உபதேசித்த இடங்கள் முதலியவற்றைத் தரிசித்துப்போக இந்தியா வந்தனர்; அவ்வாறு வந்த சீன யாத்திரிகர் பலர் ஆவர். அவருள் பாஹியான் என்பவர் கி. பி. நான்காம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்தார். நரசிம்மவர்மன் காலத்தில் இந்தியா வந்தவர் ஹியூன் - ஸங் என்பவர்.

அவர் வந்தபொழுது வட இந்தியாவிற் பேரரசனாக இருந்தவன் ஹர்ஷவர்த்தனன் என்பவன். தக்ஷிண பீடபூமியில் இரண்டாம் புலிகேசி பேரரசனாக இருந்தான்; தென் நாட்டில் நமது பல்லவ-நரசிம்மவர்மன் பேரரசனாக விளக்கமுற்று இருந்தான். ஹியூன் - ஸங் வட இந்தியாவில் பார்க்கத் தக்க இடங்களை எல்லாம் பார்த்து மகிழ்ந்தார்; அவ்வாறே சாளுக்கியப் பெருநாட்டிலும் பல இடங்

களைக் கண்ணுற்றார்; பின்னர் காஞ்சிக்கு வந்து தங்கினார்; தமிழ் நாட்டை நன்கு பார்வையிட்டார்; தம் கருத்துக்களைத் தமது யாத்திரைக் குறிப்பில் எழுதிக்கொண்டார்.

ஹியூன் - ஸங் குறிப்புகள்

"காஞ்சியைச் சுற்றியுள்ள நாடு செழிப்புள்ளது. அங்குள்ள மக்கள் உழைப்பாளிகள்; உண்மையுள்ளவர்கள்; கற்றவரையும் ஒழுக்கமுள்ள பெரியவரையும் மதித்து நடப்பவர்கள்; ஒழுக்கம் உள்ளவர்கள்; பழிக்கு அஞ்சுபவர்கள்; உயர்ந்த கொள்கைகட்கு மதிப்புத் தருபவர்கள். இந்த நாட்டில் நூறு பௌத்த மடங்கள் இருக்கின்றன. அவற்றில் பதினாயிரம் பௌத்த துறவிகள் இருக்கின்றனர். பௌத்தர் கோவில்கள் அல்லாத பிற சமயக் கோவில்கள் எண்பது இருக்கின்றன. இந் நாட்டில் திகம்பர சமணர் பலர் இருக்கின்றனர். புத்த பகவான் காஞ்சிக்கு வந்து அறம் உபதேசித்ததாக இங்குள்ள மக்கள் நம்புகின்றனர். நாலந்தாப் பல்கலைக் கழகத்தில் சிறந்த பேராசிரியராக இருந்த தர்மபாலர் என்பவர் காஞ்சி நகரத்தவரே ஆவார்........................நான் பாண்டிய நாட்டையும் சென்று பார்வை யிட்டேன். அங்குச் சிலரே உண்மைப் பௌத்தராக இருக்கின்றனர். பலர் பொருள் சம்பாதிப்பதிலும் அதனைக் காப்பதிலும் ஈடுபட்டுள்ளனர். அந்த நாட்டில் பௌத்த மடங்கள் பல இருந்தன என்பதற்குரிய அடையாளங்கள் தெரிகின்றன.........................." என்பன ஹியூன் - ஸங் குறிப்புகள் ஆகும்.

"காஞ்சி மாநகரம் ஆறு கல் சுற்றளவு உடையது. அது கடலை நோக்கி இருபது மைல் விரிந்துள்ள பெரிய நகரமாகும். அங்கிருந்து (கடல் மல்லையிலிருந்து) கப்பல்கள் இலங்கைக்குப் போகின்றன" என்று குறித்துள்ளார்.

---

7. மஹா மல்லபுரம்

மஹா மல்லன்

நரசிம்மவர்மன், பேரரசரான சாளுக்கியன், பாண்டியன் இவர்களையும் சோழன், கங்கன் முதலிய அரசர்களையும் வென்று இலங்கை அரசனையும் தோற்கடித்த சிறப்பு நோக்கித் தன்னை **மஹா மல்லன்** என்று அழைத்துக்கொண்டான்.

மஹா மல்லபுரம்

மஹா மல்லன் காலத்தில் கடல்மல்லை சிறந்த துறைமுகப் பட்டினமாக இருந்தது. அது கி. பி. முதல் நூற்றாண்டிலிருந்தே புகழ் பெற்ற துறைமுக நகரமாக இருந்தது. அரேபியாவில் இருந்து குதிரைகள் அங்கு இறக்கப்பட்டன. அப் பழைய காலத்திலேயே அங்கு உயர்ந்த மாட மாளிகையில் இருந்தன என்று பழந்தமிழ் நூல்கள் செப்புகின்றன.

சோழர் ஆண்ட காலத்தில் அத்துறைமுகம் நல்ல நிலையில் இருந்தது. அது பல்லவர் ஆட்சியில் பெருஞ் சிறப்புப் பெற்றது. அங்கு இருந்து கப்பல்கள் அணி அணியாக இலங்கைக்குச் சென்றன. அங்கிருந்து வாணிகத்திற்காகக் கப்பல்கள்

இலங்கை, சீனம், ஜாவா முதலிய இடங்கட்குச் சென்றன. எனவே, இத்துணைக் கப்பல்களையும் நிறுத்தி வைக்கத்தக்க பெரிய துறைமுகம் அங்கு இருந்திருக்கவேண்டும் அல்லவா? மேற்கு நாடுகளுடனும் கிழக்கு நாடுகளுடனும் சிறந்த முறையில் வாணிகம் செய்ய அத்துறைமுகம் நன்கு பயன் பட்டது. மஹாமல்லன் அந்நகரத்தைப் பெருக்கிச் சிறப்புடையதாக்கினான். அவன் தன் தந்தையைப் பின்பற்றிக் கோவில்களை மலையிற் குடைந்தான்; பாறைகளையே கோவில்களாக மாற்றினான். இவ்வேலைப்பாடுகள் அனைத்தும் மஹா மல்லபுரத்தில் காணப்படுகின்றன. இங்ஙனம் கடல்மல்லையைச் சிறப்பித்த காரணத்தால் மஹா மல்லன் அதற்கு மஹாமல்லபுரம் என்ற புதிய பெயர் இட்டான். அப்பெயரே நாளடைவில் 'மஹாபலிபுரம்', 'மாவலிபுரம்' என மருவி வழங்கலாயிற்று. இம் மருவிய பெயர்களைக் கொண்டு, மஹாபலி என்ற அரசன் ஆண்ட ஊர் என்றெல்லாம் கதைகள் புறப்பட்டுவிட்டன.

8. கற்கோவில்கள்

குகைக் கோவில்கள்

நரசிம்மவர்மன் தன் தந்தையைப் பின்பற்றிக் குன்றுகளில் கோவில்களைக் குடைந்தான். அத்தகைய கோவில்களை மஹா மல்லபுரம், நாமக்கல், திரிசிரபுரம் ஆகிய இடங்களிற் காணலாம். நரசிம்மன் சிறந்த வைணவன். ஆதலால் அவன் குடைந்த கோவில்களும் வைணவக் கோவில்களே

ஆகும். மஹாமல்லபுரத்தில் உள்ள மகிஷாசுர மண்டபம், வராக மண்டபம், திரிமூர்த்தி மண்டபம் என்பன 'மண்டபங்கள்' அல்ல. அவை கோவில்களே ஆகும்.

இந்த எல்லாக் கோவில்களிலும் சிற்பவேலை மிகுதியாக இருக்கும். முன் மண்டபச் சுவர்களில் மிகவும் அழகான சிலைகளும் வரிசை வரிசையாக அன்னப் பறவைகளும் சிறிய மணிமாலைகளும் வெட்டப்பட்டு இருக்கும். தூண்களின் மேல்பகுதி உருண்டு இருக்கும்; பூவேலைகள் நிரம்பியிருக்கும். தூண்களின் அடியில் ஏறத்தாழ இரண்டு முழ உயரமும் இரண்டு முழ அகலமும் உள்ள சிங்கங்கள் திறந்த வாயுடன் தூண்களைத் தாங்கிக் கொண்டு அமர்ந்த நிலையில் இருப்பனவாக அமைக்கப்பட்டிருக்கும். இச் சிங்கத்தூண்கள் நரசிங்க வர்மனை நினைப்பூட்டுவனவாகும்.

திருச்சிராப்பள்ளி மலைமீது இருக்கும் கோவிலில் உள்ள சிற்பங்கள் பார்க்கத்தக்கவை. சிவன், பிரமன், இந்திரன், துர்க்கை, கணபதி இவர்தம் உருவங்கள் திறம்படச் செய்யப்பட்டுள்ளன. கோவிலின் முன்பக்கத்தில் மரவிட்டங்கள் போலக் கல்லில் செய்துள்ள வேலைப்பாடு பார்த்து மகிழத்தக்கது.

ஒற்றைக் கல் கோவில்கள்

இவை 'பஞ்ச பாண்டவர்' ரதங்கள் என்று தவறாகக் கூறப்படுகின்றன. மஹா மல்லபுரத்தில் உள்ள ஒற்றைக்கல் ரதங்கள் எல்லாம் கோவில்களே ஆகும். இவை அக்காலக் கோவில்கள் ஆகும்.

இவற்றில் தருமராஜர் தேர் என்பது சிவன் கோவில் ஆகும். இது மூன்று தட்டுகளைக் கொண்ட விமானத்தை உடையது. இதன் விமானத்தைப் பார்த்தே காஞ்சி-கயிலாச நாதர் கோவில் விமானம் பெரிய அளவில் கட்டப்பட்டது என்னலாம்.

பீமசேனன் தேர் என்பது ஒருவகைப் பழைய கோவில். அதன் விமானத்தைச் சுற்றி வழி விடப்பட்டுள்ளது மேல் இடம் நாற்பத்தைந்து அடி நீளம்; அகலம் இருபத்தைந்து அடி; உயரம் இருபத்தாறு அடி. இக்கோவில் அமைப்பைப் பிற்கால மண்டபங்களில் காணலாம்

திரௌபதி தேர் என்பது துர்க்கையின் கோவில் ஆகும். இது கிராம தேவதையின் கோவிலைப்போல அமைக்கப்பட்டது. அர்ச்சுனன் தேர், சகாதேவன் தேர் என்பன பௌத்தப் பள்ளி, பௌத்தர் கோவில்போன்ற அமைப்பில் அமைந்தவை. இவை யாவும் அக்காலத்தில் இருந்த செங்கற் கோவில்களைப் பார்த்தே அமைக்கப் பட்டவை ஆகும்.

இவற்றின் சிறப்பு

பல்லவர்க்கு முன் தமிழ்நாட்டில் கோவில்கள் எவ்வாறு கட்டப்பட்டன? அவை செங்கல், சுண்ணாம்பு, மரம், உலோகம் இவற்றால் கட்டப்பட்டன. அவை பெரியவும் சிறியவுமாகக் கட்டப்பட்டு இருந்தன. மஹா மல்லபுரத்தில் உள்ள கற்கோவில்கள் பழைய சிறிய கோவில்களைப் பார்த்து அமைக்கப் பட்டவை. பழைய கோவில்கள் அழியக்கூடிய

பொருள்களால் ஆனவை. ஆனால் பல்லவர் அமைத்த கோவில்கள் உலகம் உள்ள அளவும் அழியாத கற்கோவில்கள். குன்றுகளைக் குடைந்து கோவில்கள் அமைக்கப்பட்டன எனின், அக்காலக் கல் உளித் தச்சரது வேலைத்திறனை நாம் என்னெனப் புகழ்வது! பாறைகளில் அழகிய—உயிருள்ளனபோலத் தோற்றும் உருவங்களை அமைத்த சிற்பிகளுடைய திறமையை எவ்வாறு புகழ்வது! இவை அனைத்தும் 1300 ஆண்டுகட்கு முன் தமிழ் நாடு இருந்த உயரிய நாகரிக நிலையை அல்லவா காட்டுகின்றன?

9. சமய நிலை

அக்காலச் சமயங்கள்

பல்லவ நாட்டில் சைவம்—வைணவம்—பௌத்தம்—சமணம் ஆகிய பல சமயங்கள் இருந்தன. மகேந்திரன் காலம் வரை சமணம் உயர்ந்த நிலையில் இருந்தது. அவன் சைவனாக மாறிய பிறகு சைவம் தலைதூக்கியது; வைணவமும் வளர்ச்சி பெறலாயிற்று நரசிம்மன் காலத்தில் சைவமும் வைணவமும் நன்றாக வளர்ந்தன.

சைவ சமயம்

நரசிம்மவர்மன் சேனைத்தலைவர் சிறந்த சிவனடியார் ஆகிய சிறுத்தொண்டர் அல்லவா? அக்காலத்தில் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் என்ற சைவ சமய ஆசாரியர்கள் பல்லவ நாடு முழுவதும் சுற்றிக் கோவில்களில் திருப்பதிகங்களைப்

பாடினர்; மக்கட்குச் சைவசமய உண்மைகளைப் போதித்தனர். அவர்களைச் சுற்றி நூற்றுக் கணக்கான சிவனடியார்கள் ஊர்தோறும் சென்றனர். அக்காலத்துக் கோவில்கள் சிறந்த முறையில் இருந்தன. அவற்றை அடுத்து மடங்கள் இருந்தன. மடங்களில் தங்கிய ஆசாரியர்கள் பொது மக்கட்குச் சமய உண்மைகளைப் போதித்தனர். குடிமக்கள் மனத்தைக் கவர அங்கங்கே தண்ணீர்ப் பந்தல்கள், அன்ன சத்திரங்கள் முதலியன வைக்கப்பட்டன.

கோவில்களில் ஆடுமகளிர்—பாடுமகளிர் இருந்து இசையும் நடனமும் வளர்த்தனர்; சமய சம்பந்தமான இசைப் பாக்களும் நடனங்களும் நாடகங்களும் பிரசங்கங்களும் பொதுமக்கள் உள்ளத்தைச் சைவத்தின்பால் இழுத்தன. இவ்வாறே வைணவ சமயப் பிரசாரமும் ஓரளவு நடந்தது.

பொற் காலம்

சுருங்கக் கூறின், நரசிம்மவர்மன் தமிழகத்தை ஆண்ட காலம் தென் இந்திய சரித்திரத்தில் பொற்காலம் என்னலாம்; சிற்பம்—ஓவியம்—இசை—நடனம்—நாடகம் முதலிய நாகரிகக் கலைவளர்ச்சியிலும் பொற்காலம் என்னலாம்.

சோழன்
இராஜராஜன்


இராஜராஜன்காலத்துச்
சோழப்பெருநாடு
[கி.பி. 985-1014]
கோதாவரி
வேங்கி
காளத்தி
தொண்டைமாநாடு
காஞ்சி
கும்பகோணம்
நாகப்பட்டினம்
வஞ்சி
லக்ஷத் தீவுகள்
மாலத் தீவுகள்
குமரிமுனை
அநுராதபுரம்
இலங்கை

3. சோழன் - இராஜராஜன்

1. இளவரசன்

சோழர் சிறப்பு

சோழ வேந்தர் ஏறக்குறைய இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளாகத் தமிழ் நூல்களில் இடம் பெற்றுள்ளனர். அவர்கள் பெரும்பாலும் சைவ சமயத்தவராகவே இருந்தனர். அவர்கள் நாடு வளமிக்க நாடு; ஆதலால் சோற்றுக் கவலை இன்றிக் கல்வித் துறையிலும் சமயத் துறையிலும் தங்கள் கவனத்தைச் செலுத்திவந்தார்கள். சங்க காலச் சோழருள் சிறந்து விளங்கியவன் கரிகாலன் என்பவன். அவன் செங்குட்டுவனுக்கு முன் தமிழ் நாட்டில் பேரரசனாக விளக்கமுற்றவன். அவனே தொண்டைநாட்டை முதன்முதல் வென்று சோ நாட்டுடன் சேர்த்து ஆண்ட பேரரசன். அவனுக்குப் பிறகு தென் இந்தியாவை ஒரு குடைக்கீழ் வைத்து ஆண்ட சோழப் பேரரசன் நமது இராஜராஜனே ஆவன். அவன் காலம் கி. பி. 985-1014

இளமைப் பருவம்

இராஜராஜன் முன்னோர் சிறந்த கல்விமான்கள்; சிவபக்தர்கள். இராஜராஜன் பாட்டனார் கண்டராதித்தர் என்பவர். அவர் சிறந்த சிவனடியார். அவர் மனைவியார் செம்பியன் மாதேவியார் என்பவர். அவர் தம் சொத்து முழுவதையும் சிவன் கோவில்கட்கே செலவழித்தார். அந்த

அம்மையார் ஏறக்குறைய எண்பது வயதுக்கு மேலும் வாழ்ந்திருந்தார். இராஜராஜன் அந்த அம்மையாரால்வளர்க்கப்பட்டவன். ஆதலால் அவன் இளமை முதலே பெரியோரிடம் அன்பு, மரியாதை, அடக்கம் உடையவனாக இருந்தான்; சிவ பக்தனாகவே விளங்கினான்.



இராஜராஜன்

உயர்ந்த குணம்

இராஜராஜன் பட்டத்திற்கு உரிய வயதை அடைந்தான். ஆனால் அவனது சிற்றப்பன் உத்தம சோழன் — செம்பியன் மாதேவியார் மகன் அரசனாக விரும்பினான். குடிகள் இராஜராஜனையே அரசன் ஆகுமாறு வற்புறுத்தினர். இராஜராஜன் குடிகட்கு நல்லுரை கூறித் தன் சிற்றப்பனையே அரசனாக இருக்குமாறு செய்தான்; தான் இளவரசனாக இருந்து அவனுக்கு

வேண்டிய உதவிகளைச் செய்துவந்தான்; இவ்வாறு இராஜராஜன் ஏறக்குறையத் தன் நாற்பதாம் வயதுவரை இளவரசனாக இருந்தான்; கி. பி. 985-ல் சோழ அரசன் ஆனான்.

குடும்பம்

இராஜராஜனுக்கு மனைவியர்பலர் இருந்தனர். அவர்கள்—உலகமகா தேவியார், சோழ மகாதேவியார், அபிமானவல்லியார், திரைலோக்கியமாதேவியார், பஞ்சவன் மாதேவியார், வானவன் மாதேவியார் முதலியோர் ஆவர். இவருள் வானவன் மாதேவியார்க்கு மட்டுமே ஓர் ஆண்மகவு பிறந்தது. அந்த ஆண்மகனே உலகப் புகழ்பெற்ற இராஜேந்திர சோழன். இராஜராஜனுக்குக் குந்தவை, மாதேவடிகள் என்ற பெண்மக்கள் இருவர் இருந்தனர். இராஜராஜனுக்குக் குந்தவையார் என்றொரு தமக்கையார் இருந்தார். இராஜராஜன் அவர்மீது அளவற்ற அன்பும் மதிப்புங்கொண்டிருந்தான், இராஜராஜன் பட்டம் பெற்றபொழுது இராஜேந்திரன் ஏறக்குறையப் பதினைந்து வயதுடையவனாக இருந்தான்; தமிழ்க்கல்வியும் அரசியல் அறிவும் போர்ப் பயிற்சியும் பெற்று விளங்கினான்.

---

2. போர்ச் செயல்கள்

படை திரட்டல்

இராஜராஜனுக்குச் சோழப் பெருநாடு ஒன்றை அமைக்க வேண்டும் என்பது அவா. அதனால் அவன் பட்டம் பெற்றது முதல் நான்கு வருட

காலம் கடற் படையையும் காலாட் படையையும் பெருக்குவதில் கவனம் செலுத்தினான்; நூற்றுக் கணக்கான கப்பல்களைத் தயாரித்தான்; தன் வீரர்க்குத் தரைப்போரும் கடற்போரும் கற்பித்தான்.

சேர—பாண்டிய நாடுகள்

இங்ஙனம் படைகளைத் தயார்செய்து கொண்டு இராஜராஜன் பாண்டிய நாட்டையும் சேர நாட்டையும் ஒரே சமயத்தில் தாக்கினான். பாதிப் படை பாண்டிய நாட்டின்மீது பாய்ந்தது; மற்றொரு பாதி மேற்குத் தொடர்ச்சிமலைக் கணவாய்கள் வழியே சேர நாட்டிற்குட் புகுந்தது. ஏறத்தாழ நான்கு வருடகாலம் போர் நடைபெற்றது; இறுதியில் சேரநாடு முழுவதும் சோழன் ஆட்சிக்கு உட்பட்டது. பின்னர் அங்கு வெற்றி கொண்ட சோழப்படை மேற்கிலிருந்து பாண்டிய நாட்டைத் தாக்கியது. இருவகைப் படைகளின் தாக்குதலால் பாண்டிய நாடு எளிதில் சோழர் கைப்பட்டது. இராஜராஜன் பாண்டிய நாட்டிற்கு 'இராஜராஜ மண்டலம்' என்று பெயரிட்டான்; தன் பிறந்த நாள் விழாவைச் சேரநாட்டில் கொண்டாட ஏற்பாடு செய்தான்; அந்தந்த நாட்டு அரசர்களைத் தனக்கு அடங்கிய சிற்றரசராக இருக்கச் செய்து, தலைநகரான தஞ்சாவூருக்கு மீண்டான்.

இலங்கையில் வெற்றி

இராஜராஜன் சேர, பாண்டிய நாடுகளைத் தாக்கியதைக் கேட்ட இலங்கை அரசன், 'சோழ அரசன் சேர-பாண்டிய நாடுகளை வென்று விட்

டால், இலங்கைக்கும் ஆபத்து உண்டாகலாம். ஆதலால் சேர - பாண்டியர்க்கு உதவி செய்து சோழனை முறியடிக்க முயலவேண்டும்' என்ற எண்ணத்தால் சேரபாண்டியர்க்குப் படைகளை அனுப்பி உதவி செய்தான். இதனால் சீற்றம் கொண்ட இராஜராஜன், சேர பாண்டிய நாடுகளை வென்ற பிறகு இலங்கைமீது படையெடுத்தான்; தனது பெரிய கடற்படை உதவியால் பண்பட்ட படை வீரரை ஆயிரக் கணக்கில் கொண்டு சென்று இலங்கையில் இறக்கினான்.

இலங்கை அரசன் தன் படைகளுடன் வந்து சோழர் படையைத் தாக்கினான். போர் கடுமையாக நடந்தது. சோழ நாட்டுப் படை வீரர் மேலும் பல கப்பல்களில் வந்து சேர்ந்தனர். சோழப் படை வீரர் இலங்கைப் படைவீரரைவிட எண்ணிக்கையிலும் போர்த்திறமையிலும் மிகுந்திருந்தனர்; அதனால் வெற்றி கொண்டனர். இப்போரில் இலங்கையின் தலைநகரமான அநுராதபுரம் அழிக்கப்பட்டது. வட இலங்கை மட்டும் சோழர் ஆட்சிக்கு உட்பட்டது. போலநருவா என்பது தலைநகரமாக ஆக்கப்பட்டது. அங்கு இராஜராஜன் தன் பெயரால் சிவன் கோயில் ஒன்றைக் கட்டினான். அக்கோவில் இன்றும் அங்கு இருந்து இராஜராஜன் வெற்றியை நினைவூட்டி வருகின்றன.

பிற நாடுகளைக் கைப்பற்றல்

இராஜராஜன் இங்ஙனம் சேர - பாண்டிய-ஈழ நாடுகளை வென்ற பிறகு கொங்கு நாடு, கங்க நாடு, நுளம்ப நாடு, குடகு முதலிய நாடுகளின் மீது படை

களை ஏவி அவற்றைக் கைப்பற்றினான். இப்படையெடுப்பில் இராஜராஜன் தன் ஒப்பற்ற மைந்தனை இராஜேந்திரனையே பெரும் படைத் தலைவனாக (மஹா தண்ட நாயகன்) அனுப்பினான். இளஞ்சிங்கமாகிய இராஜேந்திரன் மேற்சொன்ன நாடுகளை எல்லாம் வென்றான்; அங்கங்கு இருந்த அரசர்களைச் சோழ அரசுக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசராக்கினான். இங்ஙனம் வடக்கே துங்கபத்திரை யாறு வரை சோழப் பெருநாடு விரிவடைந்தது.

வேங்கை நாடு

கிருஷ்ணையாற்றுக்கும் கோதாவரி யாற்றுக்கும் இடைப்பட்ட கிழக்குக் கரையோர நாடு வேங்கை நாடு எனப்பட்டது. அதற்கு மேற்கே உள்ள பெருநிலப் பகுதியை மேலைச் சாளுக்கியர் என்பவர் ஆண்டு வந்தனர். வேங்கை நாட்டைக் கீழைச் சாளுக்கியர் ஆண்டு வந்தனர். இராஜராஜன் காலத்தில் வேங்கை நாட்டு அரச குமாரர்கள் இருகட்சியினராகப் பிரிந்து சண்டையிட்டனர். ஒரு கட்சியினர் இராஜராஜனை உதவி வேண்டினர். மற்றொரு கட்சியினர் மேலைச் சாளுக்கிய அரசனை நாடினர்.

சோழர் - சாளுக்கியர் போர்

இதனால் சோழர்க்கும் மேலைச் சாளுக்கியர்க்கும் போர் தொடங்கிற்று. சோழப் பெரும்படை துங்கபத்திரை யாற்றைக் கடந்து மேலைச் சாளுக்கிய நாட்டில் நுழைந்தது. அப்படைக்குத் தலைவனாக இராஜேந்திர சோழன் விளங்கினான். அவன்

மேலைச் சாளுக்கிய அரசனைப் பல இடங்களில் தாக்கிப் போர் செய்தான்; சாளுக்கிய நகரங்களை நாசமாக்கினன்; பல ஊர்களைத் தீக்கு இரையாக்கினன்; சாளுக்கிய அரசனைப் புறங்காட்டி ஓடச் செய்தான். இதனால் இராஜராஜனைச் சரண் அடைந்த வேங்கை நாட்டுக் கட்சியார் வேங்கை நாட்டு அரசர் ஆயினர்.

புதிய சம்பந்தம்

வேங்கை நாட்டு அரச மரபினருள் விமலாதித்தன் என்பவன் ஒருவன். அவனும் அவனது அண்ணனுமே சோழ அரசன் துணையை நாடினவர். இராஜராஜன் விமலாதித்தனை இளவரசன் ஆக்கினன்; விமலாதித்தனுக்குத் தன் மகளான குந்தவையை மணம் செய்துகொடுத்தான். இந்தப் புதிய சம்பந்தத்தால் சோழரது செல்வாக்குக் கோதாவரி யாறுவரை பரவியது; மேலைச் சாளுக்கியரது சக்தியும் ஓர் அளவு ஒடுக்கப்பட்டது.

மஹேந்திர மலையில் வெற்றித்தூண்

வேங்கை நாட்டில் சோழன் செல்வாக்கினல் பட்டம் பெற்ற அரசனுக்குச் சிற்றரசர் சிலர் அடங்கவில்லை. அதனல் இராஜேந்திரன் தன் படையுடன் வேங்கை நாட்டிற்கு வடக்கே சென்றான். கஞ்சம் ஜில்லா வரை இருந்த சிற்றரசர்களை வேங்கை நாட்டு வேந்தன் சார்பாக வென்று அடக்கினன்; அங்குள்ள மஹேந்திர மலையில் தன் வெற்றிக்கு அடையாளமாக ஒரு கற்றூணை நாட்டினன். என்னே நம் தமிழ் அரசன் வீரம்!

மாலத் தீவுகள்

இவை கன்னியா குமரி முனைக்குத் தென் மேற்கில் இந்து மஹா சமுத்திரத்தில் இருப்பவை ; கடல் வாணிகத்தில் சிறந்த இடம் பெற்றவை. இவற்றைத் தன் ஆட்சியில் வைத்திருத்தல் நல்ல தென்று இராஜராஜன் எண்ணினான் போலும்! அதனால் தன் கடற் படையை மாலத்தீவுகள் மீது ஏவினான் ; இவற்றைக் கைக்கொண்டான். இங்ஙனம் இலங்கை, மாலத் தீவுகள் முதலிய பல தீவுகளையும் கைப்பற்றி ஆண்ட முதல் சோழ அரசன் இராஜராஜனே ஆவன்.

ஜயம் கொண்ட சோழன்

இவ்வாறு பல நாடுகளையும் பல தீவுகளையும் வென்றதால் இராஜராஜன் தன்னை 'ஜயங் கொண்ட சோழன்' என்று அழைத்துக்கொண்டான் ; அப்பெயரால் ஒரு நகரத்தையும் அமைத்தான். அவ்வூர் திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் உடையார் பாளையம் தாலூகாவில் இன்று சிற்றூராக இருக்கின்றது.

'இராஜராஜன்'

இராஜராஜனது இயற் பெயர் அருள் மொழித் தேவன் என்பது. அவன் ஜெயங்கொண்ட சோழன் ஆன பிறகே 'இராஜராஜன்' என்று எல்லோராலும் பாராட்டப்பட்டான். அப்பெயர் பெயரளவில் நில்லாது செயல் அளவில் பொருள் தந்து நின்றது.

இராஜராஜன் பெருநாட்டில் அரசர் பலர் இருந்தனர் அல்லவா? அவர் அனைவர்க்கும் சோழன் அரசன் ஆவன். அஃதாவது 'அரசர்க்கு அரசன்' என்பது பொருள். இங்ஙனம் போர்ச் சிறப்புப் பெற்ற இராஜராஜன், சைவ சமயத்துக்குச் செய்த அழியாத தொண்டு யாதெனக் காண்போம்.

---

3. திருமுறை கண்ட இராஜராஜன்

திருப்பதிகங்கள்

இராஜராஜன் சிறந்த சிவபக்தன் என்று முன் கூறினோம் அல்லவா? அவன் திருவாரூர், தில்லை (சிதம்பரம்), மதுரை முதலிய க்ஷேத்திரங்களில் உள்ள கோவில்களுக்குச் சென்றான். அப்பொழுது அங்கு இருந்த ஓதுவார்கள் அந்த ஸ்தலத்தைப் பற்றிய திருப்பதிகங்களைப் பாடினார்கள். அவை திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர், சுந்தரர் என்ற சைவசமய குரவரால் பாடப்பட்டவை. இராஜராஜன் அவற்றைக் கேட்டு மனம் கரைந்தான். அவன் மனம் பக்தியால் பரவசம் அடைந்தது. "எல்லா க்ஷேத்திரங்கட்கும் இவ்வாறு பாடல்கள் இருக்கவேண்டும் அல்லவா?" என்று அவன் அங்கிருந்த பெரியோர்களை விசாரித்தான். அவர்கள், "அரசர் பெரும், சமய குரவர் எல்லாக் கோவில்களிலும் திருப்பதிகம் பாடினர். ஆனால் அவை அனைத்தும் ஓர் இடத்தில் இல்லை. அந்த அந்த இடத்துக் கோவிலில் அந்த அந்தக் கோவில் பதிகமே பாடப்பட்டு வருகிறது" என்றனர்.

இராஜராஜன் முயற்சி

சோழப் பேரரசன் திருப்பதிகங்களைத் தொகுத்து வெளியிட எண்ணினான்; எல்லாத் திருப்பதிகங்களும் இருக்கும் இடத்தை அறிய விரும்பினான்; பெரியோர் சிலர் மூலமாகச் சிதம்பரத்தை அடுத்த திருநாரையூரில் வாழ்ந்த **நம்பியாண்டார் நம்பி** என்பவர் பெருமையைக் கேள்வியுற்றான்; அவரைச் சென்று கண்டு தன் மனக்கருத்தைத் தெரிவித்தான். அப்பெரியவர், 'அரசரே, மூவர் பாடிய திருப்பதிகங்கள் தில்லைக் கோவிலில் உள்ள அறை ஒன்றில் தக்க பாதுகாப்பில் இருக்கிறது. தில்லை வாழ் அந்தணர் அநுமதி பெற்று அவற்றை எடுக்கலாம்'' என்றார்.

தில்லையில் இராஜராஜன்

உடனே அரசன் தில்லையை அடைந்து நடராஜப் பெருமானுக்குச் சிறப்புப் பூசைகள் செய்வித்துத் தில்லைவாழ் அந்தணரைக் கண்டான். அவர்கள், "திருப்பதிகங்களைப் பாடிய மூவரும் வந்தால் அறைக்கதவு திறக்கும்" என்றனர். இராஜராஜன் நுட்ப அறிவு வாய்ந்தவன். ஆதலால் அவன் மூவர் செப்புச் சிலைகளையும் அலங்காரம் செய்து பூசை முதலியன செய்வித்து, தெருவில் எழுந்தருளச் செய்து, திருமுறைகள் இருந்த அறைக்கு எதிரில் கொண்டுவந்து நிறுத்தினான்.

அவனது நுண்ணறிவைப் பாராட்டிய தில்லை வாழ் அந்தணர் அறைக் கதவைத் திறந்தனர். இராஜராஜன் ஆவலோடு அறைக்குள் சென்றான்; அறை நடுவில் பெரிய கரையான் புற்றைக் கண்

டான்; அதைக் கலைந்தவுடன் செல்லரிக்கப்பட்ட பெரிய ஏடுகளைக் கண்டான்; அவற்றைப் பார்த்த பொழுது அவையே திருப்பதிக ஏடுகள் என்பதை உணர்ந்தான். அவன் மனம் வருந்தியது. நம்பி யாண்டார் நம்பி அவனுக்கு ஆறுதல் கூறி, எல்லா ஏடுகளையும் எடுத்து ஒழுங்கு செய்தார்.

ஏழு திருமுறைகள்

நம்பியாண்டார் நம்பி சிறந்த தமிழ்ப் புலவர்; சைவப் பெரியார். ஆதலால் அவர் திருப்பதிகங்களை நன்றாகப் பார்வையிட்டுத் திருநாவுக்கரசர் பாடியவற்றைத் தனியாக எடுத்து வைத்தார்; சம்பந்தர் பாடியவற்றைத் தனியாக எடுத்து வைத்தார்; சம்பந்தர் பாடியவற்றை முதல் மூன்று திருமுறைகளாகவும், திருநாவுக்கரசர் பாக்களை அடுத்த மூன்று திருமுறைகளாகவும், சுந்தரர் திருப்பதிகங்களை ஏழாம் திருமுறையாகவும் பிரித்து ஒழுங்கு செய்தார். இந்த ஏழு திருமுறைகளே அடங்கல் முறை என்பன.

நாடெங்கும் திருப்பதிகங்கள்

இவ்வாறு புதையுண்டு கிடந்த திருப்பதிகங்களை இராஜராஜன் வெளிப்படுத்தினன் என்பதை அறிந்தவுடன் நாட்டு மக்கள் அவனைத் 'திருமுறை கண்ட இராஜராஜன்' என்று பாராட்டினர்; பல பெரிய கோவில்களில் ஏழு திருமுறைகளும் படி எடுக்கப்பட்டன; அவற்றைப் பாதுகாக்கவும் ஓது விக்கவும் அவற்றுக்கு நாள்தோறும் பூசை செய்ய வும் ஒருவர் நியமிக்கப்பட்டார். எல்லாக் கோவில் களிலும் திருப்பதிகங்கள் ஓதுவார் நியமிக்கப்பட்ட

னர்; பெரிய கோவில்களில் பலர் நியமனம் பெற்ற னர். ஆடவரும் பெண்டிரும் திருமுறைகளை ஓதக் கற்றனர்; கோவில்களில் ஓதுவாராக நியமனம் பெற்றனர். இங்ஙனம் இராஜராஜன் முயற்சியால் நாடெங்கும் திருப்பதிகங்கள் ஓதப்படலாயின; திருநாவுக்கரசர் முதலியோர் வரலாறுகளும் நாடெங்கும் பரவலாயின. சைவ சமயம் தழைத்து வளர்ந்தது.

---

4. தஞ்சை - இராஜராஜேசுவரம்

தஞ்சைப் பெரிய கோவில்

இராஜராஜன் புகழையும் தமிழர் கட்டடக் கலைச் சிறப்பையும் உலகிற்கு எடுத்துக்காட்டி நிற்பது தஞ்சைப் பெரிய கோவில் ஆகும். இப்பெரிய கோவில் ஒழுங்கான அளவுகளையும் அமைப்பையும் உடையது. இது கட்டத் தொடங்கிய காலம் கி. பி. 1003; வேலை முடிவு பெற்ற காலம் கி. பி. 1009. இதுவே அக்காலப் பெரிய கோவில்களில் முதன்மையானது; ஆதலின் 'பெரிய கற்றளி' எனப் பெயர் பெற்றது.

கோவில் அமைப்பு

இப்பெருங் கோவில் முதலில் இரண்டு வாயில்களை உடையது. அவற்றுக்கு அப்பால் பெரிய முற்றம் இருக்கிறது. அது கருங்கல், செங்கல் பரப்பப்பட்ட சமதளமாகும். அதன் நீளம் ஐந்நூறு அடி; அகலம் இருநூற்று ஐம்பது அடி. முற்றத்தின் முதலில் ஒரு மேடை இருக்கிறது. அதன்மீது ஒரே கல்லால் செய்யப்பட்ட பெரிய

நந்தி இருக்கின்றது. அதன் எதிரில் சிவபிரான் திருக்கோவில் விமானமும் பக்கத்தில் அம்மன் கோவிலும் இருக்கின்றன. உள் கோவில் மூலஸ்தானம், நடு மண்டபம், முன் மண்டபம், நடன மண்டபம், வாத்திய மண்டபம், தியாகராஜா எழுந்தருளியுள்ள மண்டபம் என்னும் ஆறு பகுதிகளை உடையது. உள் கோவிலுக்கு ஏழு வாசல்கள்



தஞ்சைப் பெரிய கோவில்

உண்டு. ஒவ்வொரு வாசலிலும் பதினெட்டு அடி உயரமும் எட்டு அடி அகலமும் உள்ள வாயிற்காவலர் இருவர் உருவச்சிலைகள் கம்பீரமாக நிறுத்தப் பட்டுள்ளன.

திருவாசல்கள்

இக்கோவிலுக்கு மூன்று வாசல்கள் உண்டு. முதற் கோபுரவாசல் 'கேரளாந்தகன் திருவாயில்'

என்பது. 'கேரளாந்தகன்' என்பது 'சேரர்க்கு யமனான இராஜராஜன்' என்று பொருள்படுவது. இரண்டாம் கோபுரவாசல் 'இராஜராஜன் திருவாயில்' என்பது. மூன்றாம் வாசல் கோவிலின் உள் வாசல் ஆகும். அது 'திரு அணுக்கன் திருவாசல்' என்பது.

கோவில் விமானம்

கோவிலின் மூல ஸ்தானத்திற்கு மேலே உள்ள விமானமே கண்ணையும் கருத்தையும் இழுப்பதாகும். விமானத்தின் அடிப்பகுதி சதுரமானது; பதின்மூன்று கோபுர மாடிகளைக் கொண்டது. அதன் உச்சியில் சமசதுரமான தளக்கல் இருக்கிறது. அதன்மீது கலசமும் கலசத்தின்மேல் அழகான ஸ்தூபியும் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வழகிய வேலைப்பாடு கொண்ட விமானத்தின் உயரம் இருநூற்றுப் பதினாறு அடியாகும். இதன் ஸ்தூபிக்குடம் செம்பினால் செய்யப்பட்டு மேலே பொன் தகடு போர்க்கப்பட்டதாம். செப்புக்குடம் ஏறக்குறைய மூவாயிரம் பலம் நிறையுடையது. மேல் உள்ள தளக்கல் இருபத்தைந்தரை அடிச் சதுரமானது. அதன் நிறை எண்பது டன் சதுரக்கல்லின் நான்கு மூலைகளிலும் எட்டு நந்திகள் இருக்கின்றன. அவை தனித்தனியே ஆறரை அடி நீளமும் ஐந்தரை அடி அகலமும் உள்ளன. விமானத்தில் காணப்படும் உருவ வேலைப்பாடுகள் நன்றாகக் கவனிக்கத் தக்கவை; கண்ணுக்கு நல் விருந்தாவன.

உருவச் சிலைகள்

கோவிலின் பல பகுதிகளிலும் உள்ள உருவச் சிலைகள் அழகானவை. திருமால், பிச்சாடனர், நடராஜர், தக்ஷிண மூர்த்தி, அர்த்தநாரீசுவரர், கங்காதரர், கலியாண சுந்தரர், மகிஷாசுர மர்த்தினி முதலிய தெய்வங்களின் உருவச் சிலைகள் பேரழகுடன் காண்கின்றன. பிராகாரத்தில் உள்ள பெரிய லிங்கங்கள், நாக கன்னிகைகள், சமய குரவர் படிமங்கள் முதலியன பார்த்து மகிழத் தக்கவை. எட்டுத்திக்குப் பாலகர்க்கு அமைந்துள்ள தனித்தனிக் கோவில் காணத்தக்கது

நாயன்மார் உருவச் சிலைகள்

பெரிய புராணம் என்னும் சைவ காவியத்தில் கூறப்பட்ட நாயன்மார் ஆகிய சிவன் அடியார் உருவச் சிலைகள் அற்புதமானவை. திருநாவுக் கரசர், திருஞான சம்பந்தர், சுந்தரர், அவர் மனைவி யாரான பரவையார், சிறுத்தொண்ட நாயனுர், அவர் மனைவியாரான திருவெண்காட்டு நங்கை, சண்டேசுவர நாயனுர் முதலியவர் உருவச் சிலைகள் அழகுடன் அமைக்கப்பட்டன. அவற்றுக்கு உயர்ந்த ஆடை ஆபரணங்களும் அளிக்கப்பட்டன. நாள்தோறும் பூசை நடைபெற்றுவந்தது. ஆண்டு தோறும் விழாக்கள் நடைபெற்றன.

ஓவியங்கள்

இராஜராஜன் சிறந்த கலைப்புலவன் ஆதலால் ஓவியங்களைத் தான் கட்டிய கோவிற் சுவர்கள்மீது தீட்டுவித்தான். மூலஸ்தானப் புறச்சுவர்கள்

மூன்றிலும் சோழர் காலத்து ஓவியங்கள் சிறந்த முறையில் தீட்டப்பட்டன. அச் சித்திரங்களுள் குறிக்கத் தக்கவை சுந்தரர் வெள்ளை யானைமீது அமர்ந்து கயிலை செல்லுதலைக் காட்டும் சித்திரமும், சேரமான்பெருமாள் நாயனார் குதிரைமீது அமர்ந்து கயிலை செல்லுதலை உணர்த்தும் சித்திரமும், இறைவன் கிழவரைப்போல வந்து சுந்தரர் திருமணத்தைத் தடுத்துத் தன் பக்தராக மாற்றும் வரலாற்றைக் குறிக்கும் சித்திரமும் ஆகும். இவை தீட்டப்பட்டு ஏறக்குறைய 940 வருஷங்கள் ஆயின. ஆயினும் என்ன? அவை இன்று செய்தாற்போல ஒளி பெற்று விளங்குகின்றன.

இறைவன்-இறைவி பெயர்கள்

கோவிற் பெயர் இராஜராஜேசுவரம். இறைவன் பெயர் 'இராஜராஜேசுவரம் உடையார்' என்பது; அம்மன் பெயர் 'உமா பரமேசுவரி' என்பது. இறைவன் பெயர் 'தக்ஷிண மேரு விடங்கர்'. 'ஆடவல்லான்' என்றும் வழங்கப்பட்டன.

ஆடலும் பாடலும்

இராஜராஜன் தான் கட்டியபெரிய கோவிலில் நானூறு பெண்மணிகளை வேலையில் அமர்த்தினான். அவர்கள் ஆடலிலும் பாடலிலும் வல்ல பெண்கள். அவர்கள் தமிழ் நாட்டுப் பெரிய க்ஷேத்திரங்களில் இருந்து வரவழைக்கப்பட்டனர். ஒவ்வொருவர்க்கும் ஒரு வீடும் ஒரு வேலி நிலமும் தரப்பட்டன. அப் பெண்மணிகள் மிகுந்த உற்சாகத்துடன் **இசை-நடனம்-நாடகம்** என்னும் மூன்று கலைகளையும்

வளர்த்து வந்தனர். சோழ அரசன் பல வகை இசைக் கருவிகளில் வல்லாரைத் தன் கோவிலில் வேலைக் கமர்த்தினன். அவர்கள் பூசை, விழாக் காலங்களில் வாத்தியங்களை ஒலிக்க வேண்டியவர்கள். திருப்பதிகம் பாடுவார் நாற்பத் தெண்மர் நியமனம் பெற்றனர். இவர்கள் எல்லோருக்கும் நிலங்கள் மானியமாக விடப்பட்டன.

கோவில் பணியாளர்

கோவில் அர்ச்சகர், வேறு பலவகைப் பணிகளைச் செய்பவர், கணக்கு எழுதுவோர் முதலிய வேலையாட்கள் நூற்றுக் கணக்கில் அமர்த்தப்பட்டனர். அவர்கள் அனைவரும் பல க்ஷேத்திரங்களில் வேலைபார்த்து அநுபவப்பட்டவர். அவர்கட்கும் நிலங்கள் மானியமாக விடப்பட்டன.

கோவிலில் காலை - நடுப்பகல் - இரவு என்னும் மூன்று காலங்களிலும் சிறப்பாக நாள் தோறும் பூசை நடைபெற்றது. கோவில் பூசை, விழா முதலியவற்றுக்காக இராஜராஜன் மானியமாக விட்ட கிராமங்கள் பலவாகும். அவன் சுவாமிக்கும் அம்மனுக்கும் கொடுத்த விலையுயர்ந்த ஆடை ஆபரணங்கள் பல. அவனுடைய தமக்கையார் - மக்கள் - மனைவியர் செய்த தானங்கள் பல. சுருங்கக்கூறின், இராஜராஜன் பெரிய கோவிலைத் தன் உயிராகக் கருதினன்; அதனைச் சிறப்பிக்கத் தன் உடைமை முழுவதையும் மனமுவந்து அளித்தான் என்னலாம். இவை அனைத்தையும் நோக்க, அப்பெருமகன் காலத்தில் அப்பெரிய கோவில் எவ்விதம்

இருந்திருக்கலாம் என்பதை நாம் ஒருவாறு அறிய முடிகின்றது அல்லவா?

சிறந்த பேரரசர்

இராசராஜன் சோழ அரசைப் பேரரசாக்கி ஆண்டவன்; சோழர் பெருமையைக் கடல் கடந்த நாடுகளில் பரவச் செய்தவன்; கோதாவரி யாறு வரை தன் செல்வாக்கை நிறுத்திய அரசியல் அறிஞன்; திருமுறைகளை வகுத்து அழியாதவாறு நிலை நிறுத்திய சைவன்; கட்டடக் கலைத்திறனை உலகம் போற்றச் செய்த கலைஞானி. இத்தகைய பேரரசனைத் தென்னாட்டு வரலாற்றில் காண்பது அருமை! அருமை!!

கட்டுரைப் பயிற்சி

கீழ்வரும் ஒவ்வொரு பொருள்பற்றியும் 20 வரிக்குள் ஒரு கட்டுரை வரைக

I. 1. அரசிளங் குமரனுக்கு வேண்டும் கல்விப்பயிற்சி.
2. இளங்கோ 'அடிகள்' ஆன வரலாறு.
3. செங்குட்டுவன் சிறந்த போர்வீரன்.
4. கண்ணகி வரலாறு.
5. பத்தினிக்குக் கோவில் கட்டிய வரலாறு.
6. செங்குட்டுவன் நல்லியல்புகள்.

II. 1. நரசிம்மவர்மன் போர்த்திறம்.
2. மஹாமல்லபுரம்.
3. சீன யாத்திரிகர் ஹியூன்—ஸங்.
4. மானவன்மன்.
5. நரசிம்மவர்மன் காலத்துச் சமயநிலை.
6. நரசிம்மன் அமைத்த கோவில்கள்.

III. 1. இராஜராஜன் போர்ச்செயல்கள்.
2. தஞ்சைப் பெரிய கோவில்.
3. இராஜராஜனும் சைவத் திருமுறைகளும்.
4. இராஜராஜன் நற்பண்புகள்.

IV. இத்தென்னாட்டுப் பேரரசர் வரலாறுகளால் நாம் உணர்ந்து இன்புறத்தக்க நற்செய்திகள்.

THENNATTU PERARASAR

BY

PANDIT W. V. KUPPUSAMY

PUBLISHERS

VENKATRAMA & CO. MADRAS

Printed at the Rajan Electric Press, Madras 1